Registered as a Newspaper in Sri Lanka No. A 15 ஆண்டுச் சந்தா: 3-50 விலை சதம் 25

# ஐக்கியதீபம்

மலர்: 32 (புதிய தொடர்) ஐப்பசி 1976 இதழ்: 6

ஸ்ரீ ல. தே. கூ. சபையில்
( யாழ்ப்பாணம் )
விற்பனையாகின்றன

| | |
|---|---|
| காசுப்புத்தகம் ஐ. நா. சங். | 30-00 |
| அங்கத்தவர் பேரேடு | 19-50 |
| அங்கத்தவர் இடாப்பு | 2-65 |
| கடன் மனுப்பத்திரம் ஐ. நா. ச. | 10 |
| கடன் முறி ஐ. நா. ச. | 10 |
| கேள்விப் பத்திரம் | 10 |
| மத்தியஸ்த மனு | 10 |

# கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களின் பங்கு

## பொது மதிப்பாய்வு

**இலங்கையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் இன்றைய நிலையினையும், அவற்றில் பெண்களின் பங்கு குறித்தும் பொதுமதிப்பாய்வு செய்வதில் இலங்கைக் கூட்டுறவு இயக்கத்திற்கு உதவ அனைத்துலகக் கூட்டுறவுச் சம்மேளனம் தனது விருப்பத்தினைத் தெரிவித்துள்ளது.**

1975-ம் ஆண்டில் மலேசியாவிலே "கூட்டுறவு வளர்ச்சியில் பெண்களின் பங்கு" என்னும் விடயம் பற்றி அனைத்துலகக் கூட்டுறவுச் சம்மேளனம் நடாத்திய மகாநாட்டில் இம்மதிப்பாய்வினைச் செய்ய வேண்டும் என்று தகவுரை செய்யப்பட்டது.

அனைத்துலகக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் உறுப்பினராக இருக்கும் கூட்டுறவு நிறுவனங்கள் தத்தமது நாடுகளிலே பெண்கள் கூட்டுறவுச் சங்கங்களில் வகிக்கும் பங்கினை விசாரித்து அறியும் வகையில் பொது மதிப்பாய்வு செய்து, அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் அதிகமாகப் பங்கெடுப்பதற்கான வழிகளைத் தெரிவிக்க வேண்டும் என்றும் அம்மகாநாடு தகவுரை செய்தது.

கூட்டுறவு இயக்கத்தில் பெண்களின் பங்கு பற்றி பொதுமதிப்பாய்வு செய்வதில் இலங்கையிலும், பிலிப்பைன்சிலுமுள்ள தமது உறுப்புரிமை நிறுவனங்களுக்கு ஆர்வமுடன் உதவ வேண்டும் என மேற்படி நிறுவனம் சமீபத்தில் நடைபெற்ற தனது கூட்டத்தில் தீர்மானித்தது.

இது தொடர்பாக அனைத்துலக கூட்டுறவுச் சம்மேளனத்தின் பிரதேச அலுவலக கல்வி உத்தியோகத்தர் (மகளிரும் இளைஞரும்) திருமதி M. D குரூஸ் விரைவில் இலங்கை வரவிருக்கின்றார். குறித்த விடயம் சம்பந்தமாக மேற்படி சம்மேளனம் சுவீடன் வல்லுநர் ஒருவரது உதவியைப் பெற முயற்சித்து வருகின்றது.

# தவறான விற்பனை கண்டுபிடிக்கப்பட்டன

வியாபாரத்தில் அவசர கால சட்ட விதிகளை கடந்த மே மாதம் பிரகடனப் படுத்திய பின்பு விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் 1240 தவறான விற்பனைகளைக் கண்டுபிடித்துள்ளது.

இத் திணைக்களம் 4239 திடீர்ச் சோதனைகளைச் செய்துள்ளது.

இச்சோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்ட விற்பனைப் பொருள்களுள் 418 பெட்டி சிந்தெற்றிக் துணிகள், 272 பெட்டி பாண், பென்சில், சவர்க்காரம், பிஸ்கற், அரிசி, மல்லி, பாலுணவு வகைகள், சீனி, மோட்டார் உதிரிப்பாகங்கள் முதலியவைகள் பிரதானமாகக் குறிப்பிடத் தக்கவையாகும்.

விற்பனைத் தத்துவம் பெறாத வியாபாரிகள் பதுக்கி வைத்திருந்த பல்வேறு பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு விநியோகம் செய்வதற்காக கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டன,

மேலதிக இருப்பு வைத்திருக்கும் வியாபாரிகளுக்குச் செயல்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அப்பொருள்கள் நலம்புரிச் சங்கங்களினூடாக விநியோகிக்கப்பட்டன.

பாணின் நிறை குறைவாக இருப்பதாகச் செய்யப்பட்டுள்ள பல முறைப்பாடுகளுக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கும் வகையில் விலைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் பேக்கரிகளைப் பரிசோதித்து வருகிறார்கள் என்று அறியப்படுகின்றது,

# விசேட பொதுக்கூட்டம்

ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் விசேட பொதுக்கூட்டம் 19-12-76 காலை 10 மணிக்கு கொழும்பு 455, காலி வீதியிலுள்ள கூட்டுறவு இல்லத்தில் நடைபெறவிருக்கின்றது என மேற்படி சபையின் பொதுச்செயலாளர் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மேற்படி சபையின் உபவிதியின் 13.1 பிரிவிற்கு ஏற்ப பின் வருவோர் பங்குபற்றலாம் என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

தேசீய கூட்டுறவுச் சபையின் அங்கத்துவத்தைப்பெற்ற தலைமைக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஒரு சங்கத்திற்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் பிரதிநிதிகள், மாவட்ட நிருவாக கிளைக்குழுக்களுக்கு ஆணையாளரால் நியமனம் செய்யப்பட்டவர்களைத் தவிர்த்து ஏனைய உறுப்பினர்கள், தேசீய கூட்டுறவுச்சபையின் பணிப்பாளர்கள்.

மாவட்ட கிளைக்குழுக்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள சகல உறுப்பினர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு கூட்ட அறிவித்தலையும் பொதுச்செயலாளர், மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பியுள்ளார்.

# கட்சி அரசியலுக்கு கூட்டுறவில் இடமில்லை

**அமைச்சரவை செய்துள்ள முடிவிற்கேற்ப தேசியப் பேரவை உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் குழுக்களில் இடம்பெற மாட்டார்கள்.**

அமைச்சரவையின் முடிவிற்கேற்ப உணவு, கூட்டுறவு, சிறுகைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு S. K. K. சூரியாராச்சி இந்த உத்தரவினை அண்மையில் பிறப்பித்தார்.

மறுசீரமைப்பில் ஏற்பட்ட வளர்ச்சிபற்றி மீளாய்வு செய்யப்பட்ட மகாநாட்டிலே இம்முடிவு எடுக்கப்பட்டது. இம்மகாநாட்டிலே சகல கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்களும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மேலும் பேசுகையில் கூறியதாவது: கூட்டுறவு இயக்கத்திலே கட்சி அரசியலை அனுமதிக்கக் கூடாதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் நோக்கத்தினை அடையும் பொருட்டு அவ்வியக்கம் மக்களால், அதாவது உறுப்பினர்களால் நடாத்தப் பட வேண்டும்.

அரசியல் நடவடிக்கைகளைத் தவிர்த்து மக்களின் தேவைகளுக்கேற்ப இயக்கத்தினை விரிவுபடுத்தி கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு அதன் நிருவாகத்தினைக் கையளித்ததால் குறிப்பிடத்தக்க அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களிலே புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும் இயக்கம் பற்றி அமைச்சர் குறிப்பிடும் போது, இது செப்டெம்பர் 30 ந் திகதிக்கு முன்பு நிறைவடைய வேண்டுமென்று குறிப்பிட்டார். ஆனால், குறித்த காலவெல்லைக்குள் போதிய உறுப்பினர்கள் சேர்க்கப் படவில்லை என அந்தந்த மாவட்ட கூட்டுறவு அதிகார சபை கருதினால் அக்கால எல்லை நீடிக்கப் படும் என்றும் கூறினார்.

சோவியத் யூனியனில் (முற்றொடர்)

# நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களும் சோஷலிச நிர்மாணமும்

வியாபாரம், பொருளாதாரம், நிதி நிர்மாணம் போன்றவற்றில் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் பூரண சுதந்திரம் கொண்டிருந்தன. அவைகள் உணவுப் பொருட்களை நியாய விலையில் கொள்வனவு செய்தன. பதப்படுத்தி விநியோகித்தன, பல்வேறு உற்பத்திப் பொருட்களையும் கொள்வனவு செய்து கட்டுப்பாட்டு விலையில் விற்றுத் தங்கள் மூலதன நிதியைப் பெருக்கின, தமது உற்பத்தித் திட்டங்களையும் நிதிநிர்ணயத் திட்டங்களையும் தாமே தரமான வழிகாட்டலின்கீழ் அமைத்துக் கொண்டன. இவற்றிற்கான நிதிகள் பின்வருமாறு பெற்றுக் கொள்ளப்பட்டன. முதலில் அங்கத்தவர்களின் பிரவேசப்பணங்களும் பங்குகளும் சேர்ந்தன, நிறுவனங்களிடமும், தனியாரிடமும் கடன்களைப் பெற்றன. அத்துடன் இத்துறையில் ஆர்வங்காட்டும் பொருளாதார நிறுவனங்களும் பெருமளவில் உதவின.

திறந்த சந்தையிலிருந்து தனிப்பட்ட வியாபாரிகளைத் தூக்கியெறிந்து நுகர்வோரை வென்றெடுக்கும் திறம்படவடிவமைந்த சோவியத் இயந்திரமாக நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ந்தன.

எனவே சோஷலிச நிர்மாணத்தின் முதற்கட்டுமானத்தில் நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்கள் மிகக் காத்திரமான பங்கை ஏற்றது மட்டுமன்றி இலாபகரமான முறையில் நுகர்வோர் நுகர்ச்சிப் பொருட்களையும், மூலப்பொருட்களையும் உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் உதவியது. அத்துடன் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் தொழிலாள விவசாயிகளின் நலவுரிமையைப் பேணும் சிறந்த நிறுவனங்களாகவும் வளர்ச்சியுற்றன.

## திருப்பு முனை

கூட்டுறவு அபிவிருத்தியில் சோவியத் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வந்துள்ளது. 1921 ல் சோவியத்துக்களின் கட்சி மகாநாடு ஏழைவிவசாயிகளைக் கூட்டுறவிற்குள் கொண்டு வருவதன் மூலம் பரஸ்பர பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொள்வதுடன் குலாக்குகளுக்கு (ஏழை விவசாயிகளைக் கூலிக்கு அமர்த்திச் சுரண்டும் பணக்கார விவசாயிகள்) எதிராக அணிதிரண்டு கிராமங்களில் தங்களை மீள நிலைநிறுத்தவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தியது.

கூட்டுறவு இயக்கத்தில் கட்சியினதும், விவசாயிகளினதும் தலைமையின் தேவைபற்றி கட்சியின் 11வது மகாநாட்டில் (1922) ஆராயப்பட்டது. இதன் விளைவாக கட்சியின் பிரதேச, மாவட்டக் குழுக்களின் வாராந்தச் செயற்பாட்டுக் கூட்டங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்று வந்தன. சகல கூட்டுறவு நிறுவனங்களிலும் கட்சிக்கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. கிராமங்களிலுள்ள கட்சி அங்கத்தவர்கள் யாவருக்கும் விவசாயத்துறையிலும், விவசாயக் கூட்டுறவுத் துறையிலும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

நாட்டின் பொருளாதாரவளம் மேனிலையை அடைந்தபோது லெனின் வகுத்த கூட்டுறவுத் திட்டத்தின் பிரகாரம் கட்சியின் 11 வது காங்கிரஸ் கூட்டுறவுத்துறையின் ஒவ்வொரு உருவங்களையும் திட்டமிட்டு வடிவமைத்தது. இக்காங்கிரசின் தீர்மானத்தில் பின்வரும் முக்கிய அம்சம் காணப்படுகிறது. "தொழிலாள விவசாயிகள் தங்கள் வர்க்க எதிரிகளை வென்றபின்பு உலகின் எப்பாகத்திலும் முன்பொருபோதும் காணாதவகையில் அமைந்த சோஷலிச நிர்மாணத்திற்கு ஜீவாதார முக்கியமாகக் கூட்டுறவுத் துறை விளங்குகின்றது. குறிப்பாக கிராமியப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட எமது நாட்டைப்போன்ற எந்தவொரு நாடும் குழு அமைப்புக்கள் மூலமே சோஷலிசத்தை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். இங்கு நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களும், உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களுந்தான் குழு அமைப்புக்களாகக் கூறப்படுகின்றன''

சுயேச்சையான அங்கத்துவமென்ற முக்கிய கூட்டுறவுக் கொள்கையை மீள அறிமுகஞ் செய்யும்போது சகல அங்கத்தவர்களுக்கும் பிரவேசப்பணம், பங்குப்பணம் என்பன கட்டாயப்படுத்தப்பட்டன. அங்கத்துவம் சம்பிரதாய பூர்வமானது என்பது நிறுத்தப்பட்டது. கிராமங்கள் தோறும் பிரச்சாரங்கள் அதிகரித்ததால் கூட்டுறவுத்துறை மேன்விருத்தியடைந்தது. சம்பிரதாய பூர்வமான அங்கத்துவத்திலிருந்து சுயேச்சையான அங்கத்துவத்திற்கு முடுக்கிவிடப்பட்டதால் அங்கத்தவர்கள் தமது நிதியிற்தொழிற்படும் கூட்டுறவுச் சங்கங்களில் சிரத்தையுடன் கூடிய கட்டுப்பாட்டைப் பேணுவதில் ஆர்வம் காட்டினர். அத்துடன் சுயேச்சையான அங்கத்துவமானது கிராமிய நுகர்ச்சிச் சபைகளின் நிதிநிலையைப் பலப்படுத்துவதில் முக்கிய

**ராஜ ஸ்ரீகாந்தன்**

இடத்தைப் பெற்றது. இதுவே கூட்டுறவுத் துறையின் புதிய திருப்பு முனையாகவும் அமைந்தது.

இதேவேளையில் ஏழை விவசாயிகளும், தொழிலாளிகளும் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் பெறவேண்டுமென்பதற்காக பிரவேசப்பணம், பங்குப்பணம் என்பன மீள்பரிசிலனை செய்யப்படுவது அவசியமாகக் கருதப்பட்டது. ஆனல் இது இருமுனைப் பிரச்சினையாக உருமாறிற்று, கட்டணங்கள் குறைக்கப்பட்டால் சங்கத்தில் நிதிப்பற்றுக்குறையும் கட்டணங்கள் குறைக்கப்படாவிட்டால் ஏழைத் தொழிலாள, விவசாயிகள் அங்கத்துவம் பெறமுடியாத நிலையும் உருவாகும் நிலையேற்பட்டது. முதலாவதைவிட இரண்டாவதே அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தமையால் கட்டணங்கள் ஒரளவு குறைக்கப்பட்டன. அத்துடன் அவர்கள் அங்கத்தவர்களானதும் அவர்களுடைய முயற்சிகளுக்காகத் தவணைமுறையில் திருப்பிச் செலுத்தக்கூடிய கடன்கள் வழங்கப்பட்டன.

அரசியல் ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழு ஆதரவு நல்கிய சோவியத் அரசு தனது கட்டிடங்களை இவற்றின் பாவனைக்காகச் சொற்ப வாடகைக்குக் கொடுத்தும், முக்கிய வரிகளிலிருந்து விதிவிலக்களித்தும், போக்குவரத்து வசதிகளை ஆக்கியும், தேவைப்பட்டபோதெல்லாம் கடனுதவி அளித்தும் பேருதவி புரிந்தது. கட்சியின் மத்தியகுழு கிராமத்தில் வாழும் ஏழைமக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக விவசாயக் கடன்களையும், நிபுணத்துவ விவசாய சேவைகளையும் நல்கிப் பராமரித்தது.

இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் தனியார் வியாபாரங்களை வேரறுத்துச் சாய்த்துவிட்டன. நாட்டின் பிரஜைகள் எல்லோரினதும் தேவைகளைப்பூர்த்திசெய்யும் அதே வேளையில் தனது அங்கத்தவர்களின் நலனில் மிகக்கூடிய கவனம் செலுத்தி அவர்களுடைய தேவைகளையும் நலன்களையும் கண்காணித்து ஆவன செய்கின்றன.

சோவியத் அரசும், கட்சியின் தலைமைப் பீடமும் கூட்டுறவுச் சங்கங்களைப் பலப்படுத்தியதன் மூலம் தனியார் வியாபாரத்தை நலிவுபடுத்தின. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மேலதிக வரிவிலக்குகள் அழித்தும் அவற்றின் நிதிநிலையைப் பேணுவதற்கெனக் கூட்டுறவு வங்கியை நிறுவியும் பேருதவி புரிந்தன. பிரவேசப்பணத்தையும், பங்குப் பணத்தையும் நியாய அளவிற்குக் குறைத்துச் செம்மையான சேவைகள் ஆற்றுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின்மீது ஏழைவிவசாயிகளின் நம்பிக்கையை வளர்த்தன. 1927ம் ஆண்டின் இறுதியில் கிராமிய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களின் எண்ணிக்கை 9.8 மில்லியனுகவிருந்தது. இக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளின் தேவைகளில் 39 சத வீதத்தைப் பூர்த்தி செய்தது. 1929ல் இச் சதவீதம் 60 ஆக உயர்ச்சியடைந்தது.

1928ம் ஆண்டிற்கும் 1929ம் ஆண்டிற்குமிடையில் நாட்டின் சில்லறை வியாபாரத்தின் 65 சதவீதம் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் கரங்களுக்கு மாற்றஞ் செய்யப்பட்டது. சோவியத் நாட்டில் சோஷலிச ஆட்சி வந்த பத்தாண்டு காலத்திற்குள்ளான வெற்றிக்கு இம்மாற்றம் சான்றுபகர்ந்தது. இக்காலத்தில் தனியார் வியாபாரத்துறை சன்னிகண்டது. இறுதியாக 1929 - 1932 ஆண்டுகளுக்கிடைப்பட்ட கைத்தொழிலாக்கத்தின்போது தனியார் வியாபாரம் முழுமையாகச் செத்து மடிந்தது.

சோஷலிசப் பொருளாதாரத்தில் நுகர்ச்சிக்கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு ஒப்பிடற்கரியது. அவைகள் அரசின் திட்டங்களை மக்கள் முன் நேரடியாக எடுத்துச் சென்று நிதிச் சுதந்திரத்தை ஏற்படுத்தின. உழைக்கும் மக்கள் தம்மைத்தாமே ஆண்டு கொள்ளும் அனுபவங்களையும் அதன் உடனடி விளைவுகளையும் உணர்வு பூர்வமாக அவர்களுக்கு விளக்கின.

சோவியத்தின் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் உலகிலேயே மிகப்பெரிய, சுறுசுறுப்பான கூட்டுறவு நிறுவனமாக இயங்கி வருகின்றன, இன்று 10,000 ஆயிரத்திற்கும் அதிகமான கூட்டுறவுச் சங்கங்களில் 63 மில்லியன் அங்கத்தவர்கள் உள்ளனர் 500,000 நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கப் பண்டசாலைகள் பொருட்களை வாங்கியும், விற்றும் உற்பத்திசெய்தும் வருகின்றன. உலகின் முதலாவது சோஷலிச நாடாகிய சோவியத் நாட்டில் நிகழ்வுற்ற சோஷலிச நிர்மாணத்தில் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள் உண்மையாகவே மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளன.

(முற்றும்)

ஆதாரம் :

சோஷலிச தத்துவமும் நடைமுறையும்

---

## ஒற்றுமையால் வருமானந்தம்

இராகம் : ஹரஹரப்பிரியா — தாளம் : ஆதி

**பல்லவி**

ஒற்றுமை யால்வரு மானந்தம் — மக்கள்
உள்ளமு ணர்ந்தால் உலகமெ லாம்சொந்தம் (ஒற்)

**அநுபல்லவி**

கற்றவ ரெல்லாம் கண்டிடுங் காட்சி
மற்றவர்க் குதவி வழங்கிடும் மாட்சி (ஒற்)

**சரணம்**

பற்பல தொழில்வகை பணத்தொகை தேங்கும்
பயிரிடும் பணியால் பசிப்பிணி நீங்கும்
அற்புத வாழ்விலே ஆனந்த மோங்கும்
அன்புமலர்ந்தே யறநெறி தாங்கும் (ஒற்)

இல்லையெ னுந்தொல்லை இல்லாம லோட்டும்
இதந்தரு முணவுடுப்புச் சுதந்திரங் கூட்டும்
நல்லத ருமதவ ஞானமு மூட்டும்
நாடுசெ ழிப்பதற்கு நன்னெறி காட்டும் (ஒற்)

அருட்கவி சி. விநாசித்தம்பி

---

## கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்களுடன் மகாநாடு

ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபை கூட்டுறவு இயக்கத்தினதும், அதன் ஊழியர்களினதும் நலன் கருதி பொதுவான சில பிரச்சினைகளை முன்னணியிலுள்ள கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்களின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுவதற்கு ஒரு மகாநாட்டினைக் கூட்ட ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

குறித்த தொழிற் சங்கங்கள் ஏற்கனவே இதற்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்துள்ளன.

மேற்படி மகாநாட்டில் கூட்டுறவு வளர்ச்சி கருதி எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதன் அடிப்படையில் தீர்மானம் செய்யப்படும் என்று நம்பப்படுகின்றது.

# பல்வகைக் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்

**1. பதப் பிரயோகம்**

விவசாய உற்பத்தி விடயங்களில் விவசாயிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற கூட்டுறவுமுயற்சியின் பிரதிபலனே 'கூட்டுறவு விவசாய சங்கங்களாகும்' இவை கூட்டுறவு முயற்சியின் மூலம் கடன் வசதி விவசாய உபகரணங்கள் (ஏனைய தேவைகள்) விற்பனை வசதிகள் என்பனவற்றை வழங்குகின்றனவும் பலநோக்கு, ஏனைய சேவை அடிப்படையிலான சங்கங்களுக்கு மாறுபட்ட வகையிலான பொறுப்புக்களை உடையனவுமான சங்கங்களாகும்.

**2. பல்வகை விவசாயச் சங்கங்கள்**

பிரதான கூட்டுறவு விவசாய சங்க வகைகள் கீழே தரப்படுகின்றன.

**2. 1. மிகச் சிறந்த வகையிலான கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்**

இச் சங்கத்தின் உறுப்பினர்கள் நிலச் சொந்தக்காரர்களாகவோ, அல்லது நிரந்தரமாக உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு சுதந்திரமாக இயங்குகின்றவர்களாகவோ விளங்குவர். எவ்வாறுயினும் இவர்கள் கீழே தரப்பட்டுள்ள விடயங்களில் ஒரு முகப்பட்டவர்களாக இருப்பர்.

(அ) சங்கத்தினுல் தயாரிக்கப்பட்ட உற்பத்தி திட்டமொன்றினை நடைமுறைப் படுத்தல்.

(ஆ) தேவைகளைச் சங்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளுதல். உற்பத்திகளை கூட்டுமுறையில் சந்தைப் படுத்துதல், சங்கத்திற்கு சொந்தமான இயந்திரங்களை பிரயோசனப் படுத்துதல்.

தேறிய இலாபத்தில் ஒரு பகுதி ஒதுக்கீடாக வைக்கப்பட்டதன் பின்னர், மறுபகுதி உறுப்பினர்களது பங்கிற்கு அமைய பகிர்ந்தளிக்கப் படும்.

**2. 2. கூட்டுறவு குத்தகை (விவசாய) சங்கங்கள்**

இத்தகைய சங்கங்கள் நிலத்தினை விலைக்கு வாங்கி அல்லது குத்தகைக்குப் பெற்றுக் கொண்டு, உற்பத்தி நடவடிக்கைகளுக்காக உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கும். சங்கத்தினுல் தயாரிக்கப்பட்ட திட்டமொன்றிற்கு அமைய உறுப்பினர்கள் இதில் உற்பத்தியினை மேற்கொள்வர். இங்கு சங்கம் உறுப்பினர்களது சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றது. சகல உறுப்பினர்களும் தாம் பெற்றுக்கொண்ட துண்டு நிலத்திற்காக சங்கத்தினுல் விதிக்கப்படுகின்ற தொகையினை வாடகையாகச் செலுத்த வேண்டும். எனினும் நிலத்தின் பயன் முழுதும் உறுப்பினரையே சாரும். ஒதுக்கீடு, ஏனைய நிதிகள் சம்பந்தப்பட்ட பணத்தொகைகள்ஒதுக்கப் பட்டதன் பின்னர் எஞ்சிய இலாபம் உறுப்பினர்களினுல் செலுத்தப்பட்ட வாடகையின் விகிதாசாரத்திற்கு அமைய உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும். இச் சங்கம் முதலாம் வகையிலான (2.1) சங்கத்திலிருந்து வேறுபடுவது உறுப்பினர்களது நில உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையினுலாகும். இவ்வகையிலான சங்கத்தின் உறுப்பினர் குத்தகை விவசாயி ஒருவருக்குச் சமமாவார்.

**2. 3. இணைக்கப்பட்ட கூட்டுறவு விவசாயச் சங்கம்**

இச்சங்கத்தின் உறுப்பினர் நிலச் சொந்தக்காரராகும். எனினும் சங்கத்தின் முகாமை பிரிவினுல் தீர்மானிக்கப்படுகின்ற உற்பத்தி வேலைத் திட்டத்திற்கு அமைய நிலத்துண்டுகளை ஒன்று படுத்தவும், இணைந்த வகையில் உற்பத்தி செய்யவும் உறுப்பினர் விருப்பம் தெரிவிப்பர். இங்கு உறுப்பினருக்கு ஊதியம் வழங்கப் படுகின்றது. வருட முடிவில் இணைந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வருமானத்தில் செலவு போக மேலதிகம் உறுப்பினரிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இந்த இலாபப் பங்கீடு, மே ற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளோடு அல்லது சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட காணியின் பிரமாணத்திற்குச் சமமான விகிதாசாரத்தினை உடையதாக இருக்கும். நில உரிமை அங்கீகரிக்கப்படுவதோடு அதன் செழிப்பினைக் கருத்திற் கொண்டு வருமான பங்கீடு மேற்கோள்ளப்படும்.

**2. 4. கூட்டு (கூட்டுறவு) விவசாயச் சங்கம்**

நிலம் இலவசமாக அல்லது குத்தகைக்குப் பெறப் படும். உற்பத்தி வேலைகள் கூட்டாக மேற்கொள்ளப் படும். உறுப்பினர் நிலச் சொந்தக்காரர்களல்ல என்பதனுல் கொடுப்பனவுகள் ஏதும் செலுத்தப்படுவதில்லை. உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கப் படுகின்றது. வருட முடிவில், ஒதுக்கீட்டுப் பணம் ஏனைய நிதிகளுக்கான பணத்தொகைகளைத் தவிர்த்து எஞ்சிய இலாபம், உறுப்பினரால் மேற் கொள்ளப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளுக்கேற்ப அவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

**ஜே. எம். ராஜு**
சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் பிரதேச அலுவலக பணிப்பாளர் (கல்வி)

**3. கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுதல்**

3. 1. இங்கு 2. 1 லும் 2. 3 லும் குறிப்பிடப்பட்ட சங்கங்களை சொந்த நிலத்தினை உடையவர்கள் (உறுப்பினர்) வகிக்கின்ற அல்லது உற்பத்தி நிலத்தில் (நிரந்தர சொந்தம் கொண்டாடுகின்ற) குடியிருக்கின்ற பகுதிகளில் ஏற்படுத்தலாம்.

3. 2. இங்கு2.2 லும், 2'4 லும் குறிப்பிடப்பட்ட சங்கங்களை உற்பத்தி மேற்கொள்ளப்படாத நிலப்பகுதிகளை உடைய அல்லது காட்டு நிலங்களையுடைய பகுதியிலான புதிய குடியிருப்புக்களில் ஏற்படுத்துவது சுலபம். நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் மேலதிக காணிகள் இருக்கின்ற பகுதிகளில் இவற்றினை உருவாக்கலாம்.

**4. இச் சங்கங்களினுல் பெறப்படுகின்ற பயன்கள்**

இதுபற்றி கருத்து வேறுபாடுகள் உள. 2.1 லும், 2.2 லும் மிகச் சிறந்த முன்னேற்றமடைந்த கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றினுல் கூட்டு உற்பத்தி நடவடிக்கைகளோ அது சம்பந்தப்பட்ட விடயங்களோ நிறைவேற்றப் படுவதில்லை. இதன் மூலம் ''சுயேச்சை இயக்க சங்கம்'' என்பது போல் மக்களுக்கும், நிலத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை அதே வகையில் கொண்டு செல்ல முடியுமாயின் உறுப்பினர்களுக்கும், நாட்டிற்கும் ஆகக் கூடிய சமூக பொருளியல் நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். மக்களை நிலத்தோடு பிணைத்து வைக்கின்ற மனோ தத்துவரீதியிலான இணைப்பினுல் கூடிய விளைச்சலைப் பெற முடியுமென்று கருதப்படுகின்றது. இன்னெரு கருத்து என்னவென்றல் உறுப்பினர்களுக்கு பொருளியல் கூறு அல்லது அலகுகளாக இயக்கிக் கொள்ளக் கூடிய வகையில் தேவையான நிலத்தினைப் பகிர்ந்தளிக்க முடியுமென்பதாகும்.

4. 2. இங்கு 2.3 லும், 2 4 லும் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டு முயற்சிகளுக்குச் சார்பானவர்களது தர்க்கங்களைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

1. வளர்முக நாடுகள் பலவற்றுள் மக்களுக்கும், நிலத்திற்கும் இடையே உள்ள வீதாசாரம் எந்தளவு தூரம் குறைவடைந்துள்ளதெனின் பொருளியல் கூறுகளாக அல்லது அலகுகளாக இயக்கக் கூடிய வகையில் நிலத்தினை தேவையான அளவில் பகிர்ந்தளிக்க முடியாத நிலையில் உள்ளது.

2. விவசாயப் பண்ணையினை விஸ்தரித்து குறைந்த செலவில் உற்பத்தியினை மேற்கொள்ள முடியும். கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களினுல் தொழில் நுட்பவிருத்தியும் ஏற்படும்.

(அ) விஞ்ஞான முறையிலும், சம அளவிலுமான நிலப் பங்கீடு.

(ஆ) முதலீட்டின் சிறந்த பயன்பாடு.

(இ) சிறு பண்ணைகளில் அறிமுகப்படுத்த முடியாத மிகச் சிறந்ததும், புது முறையிலானதுமான தொழில் நுட்ப அறிவினை இங்கு அறிமுகம் செய்யலாம்.

(ஈ) பெரிய அளவிலான பண்ணைகளைவிட சிறந்த விளைச்சலும், நிர்வாகமும் அமைந்திருக்கும். இதனுல் உற்பத்திச் செலவினைக் குறைக்க முடிவதுடன் விளைச்சலையும் பெருமளவில் அதிகரிக்கலாம்.

கூட்டு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு எதிராக விவாதிப்பவர்கள், (ஆழமான வகையில்) ஆகக் கூடிய வகையில் மனித உழைப்பினைப் பயன்படுத்த

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

# பெண்களும் கூட்டுறவும்

கூட்டுறவு இயக்கத்தில் பெண்களின் பங்கினை ஆராய்வதற்கென அலாவுவ ப. நோ. கூ. ச. அண்மையில் ஒரு கருத்தரங்கினை நடாத்தியது.

சங்கத்தின் ஒவ்வொரு கிளையிலும் மகளிர் குழுக்களை இச்சங்கம் ஏற்கெனவே நிறுவியுள்ளது. இக்குழுக்கள் இக்கருத்தரங்கில் பங்கு பற்றியதோடு மட்டுமல்லாது மேலும் உறுப்பினர்களைச் சேர்க்கும் இயக்கத்தில் பேரார்வத்தினைக் காட்டியது.

சென்ற ஆண்டு அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தினுல் மலேசியாவில் நடாத்தப்பட்ட மகளிர் கருத்தரங்கு விடுத்துள்ள தகவுரைகளுக்கேற்பவே இலங்கைத் தேசிய கூட்டுறவுச்சபைஇக்கருத்தரங்கினை ஒழுங்கு செய்தது.

# தலைவர் செல்கின்றார்

அனைத்துலக கூட்டுறவு இணைப்புத்தாபனத்தின் தென்கிழக்காசிய சபையின் பதினெட்டாவது கூட்டத்திற்கு இலங்கைத் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. எம். ஆ. பி. தாஸ் வத்த செல்லவிருக்கின்றார். இத்துடன் அவர் அனைத்துலக கூட்டுறவு இணைப்புத் தாபனத்தின் பதினேராவது கூட்டத்திலும் சமுகமளிக்கவிருக்கின்றார். இக் கூட்டம் விவசாயம், வணிகம்பற்றி ஆராயவிருக்கின்றது.

கூட்டுறவுக் கடன் வசதிகளும் நிதி முகாமையும் பற்றி நவம்பர் 15ந் திகதி தொடக்கம் 18ந் திகதி வரை சென்னையில் நடைபெறவிருக்கும் 'திறந்த' ஆசிய மகாநாட்டிலும் இவர் கலந்து கொள்வார்.


**வீரசிங்கம் மண்டபம்**

**வாடகைக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | இசை, நடனம், நாடகம் | | |
| | இரவு 5 மணித்தியாலங்கள் | ரூபா | 350/- |
| | பகல் ,, ,, | ,, | 300/- |
| 2. | கூட்டங்கள், மகாநாடு | | |
| | இரவு 1 மணித்தியாலம் | ,, | 125/- |
| | மேலதிகம் | ,, | 50/- |
| | பகல் 1 மணித்தியாலம் | ,, | 100/- |
| | மேலதிகம் | ,, | 50/- |
| 3. | திருமணம் 3 மணித்தியாலம் | ,, | 350/- |
| | மேலதிகம் | ,, | 75/- |
| | வைப்புப்பணம் இரவு | ,, | 250/- |
| | பகல் | ,, | 150/- |

# ஜேர்மன் ஜனநாயகக் குடி

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு மிகவும் அபிவிருத்தி அடைந்த ஒரு சமூகஉடமை (சோஷலிஷ) நாடாகும். அது கைத்தொழில் விருத்தியையும், நவீன விவசாய விருத்தியையும் மேற்கொண்டு உலகிலே கூடிய தொழில் வளம் பெருகியபத்து நாடுகளில் ஒன்ருக விளங்குகிறது. இவ்வளர்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங் கூறப்படுகின்றன.

(i) உற்பத்திச் சாதனங்களின் சமூக உடமை.

(ii) திட்டமிடப்பட்ட சமூக உடமைப் பொருளாதாரமுறை.

(iii) சோவியத் யூனியன் உட்பட பரஸ்பர பொருளாதார உதவிச் சபை (C. M. E. A.) யின் ஏனைய அங்கத்தவர்களான சமூக உடமை நாடுகளுடன் பொருளாதாரக் கூட்டு.

சமூக உடமை என்பதைப் பொறுத்த வரையில் சமூக உடமை நாடுகளில் அரசாங்க சொத்தும், கூட்டுறவுச் சொத்தும் சமூக உடமைகளாகக் கொள்ளப்படுகின்றன. ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் விவசாயத்தைப் பொறுத்த வரையில் ஏறக்குறைய முழுவதும் என்று சொல்லக்கூடிய முறையில் அது கூட்டுறவுச் சொத்தாகவே விளங்குகிறது. நாட்டின் விவசாய உற்பத்தி நிலங்களில் 86 சதவீதமும் விவசாய உற்பத்திக் கூட்டுறவுப் பண்ணைகளினுலேயே கையாளப்படுகின்றன. நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தில் கூட்டுறவுப் பண்ணைகளும் உட்படுத்தப் படுகின்றன. விவசாயத்தைப் பொறுத்த வரையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித்திட்டத்தை நிறைவேற்றும் பங்கு பெருமளவுக்கு விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் விவசாயம் மிகவும் வளர்ச்சியடைந்தநிலையில் உள்ளது. நாட்டில் இயற்கை நிலையைப் பொறுத்தவரையில் (சுவாத்தியம், மண்வளம்) அது விவசாயத்திற்கு அதிகம் வாய்ப்பாக அமைந்ததாக இல்லாவிடினும் அது தனது உணவுத் தேவையில் 80 வீதத்தை நாட்டிலேயே உற்பத்தி செய்யக் கூடியதாகவுள்ளது. விவசாயம் இயந்திரமயமாக்கப்பட்டதாகவுள்ளது. 1945ல் பெருமளவுக்கு குதிரைகள், மாடுகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் நிலையில் இருந்துதான், இவ்வியந்திரமய நிலைக்கு வளர்ச்சி ஏற்பட்டது. தனிப்பட்ட விவசாயத்திலிருந்து கூட்டுறவு உற்பத்தி விவசாயத்திற்கு விவசாயம் மாறியமையாலேதான் இவ்வியந்திரமயத்தைக் கொண்டு வரக் கூடியதாகவிருந்தது. மனிதனின் உடல் வேலைப் பழுவைக் குறைத்து தொழிற்சாலைகளைப் போல் இயந்திரங்கள் மூலமும் பெருமளவிலும் விவசாய உற்பத்தியைச் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. இப்போது விவசாயமும் ஒரு கைத்தொழிலாகவே கொள்ளப்படும் நிலை அங்கு

**எஸ். எஸ். பத்திநாதன்**
செயலாளர்
ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபை, மட்டக்களப்பு

ஏற்பட்டுள்ளது. விவசாயம், விவசாயக் கைத்தொழில் என அங்கு அழைக்கப்படுகின்றது. (Agricultural Industry)

இயந்திரங்களின் உதவி கொண்டு ஒரு விவசாயி 32 பேருக்குத் தேவையான உணவை உற்பத்தியாக்கக் கூடிய நிலையில் உள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற்றில் ஒரு விவசாயி 1½ ஆட்களுக்குத் தேவையான உணவை மாத்திரமே உற்பத்தி செய்யக்கூடியதாகவுள்ளது. இக்காரணத்தால் அந்நாட்டின் சனத்தொகையில் 8 வீதமானோரே நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்போது விவசாய உற்பத்தி நடைபெறும் நிலங்களில்86வீதம்900,00 வரை அங்கத்தவரைக் கொண்ட 6,500 விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் (கூட்டுறவுப் பண்ணைகள்) செய்கை பண்ணப்படுகிறது.

நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களில் பின்வரும் வீதத்தைக் கூட்டுறவுப்பண்ணைகள் உற்பத்தி செய்கின்றன.

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | – 95% |
| சீனிபீற் | – 92% |
| தானியம் | – 92% |
| அறுவை மிருகங்கள் | – 76% |
| பால் | – 93% |
| முட்டை | – 62% |

**ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் காணிச் சீர்திருத்தமும் விவசாயக் கூட்டுறவு வளர்ச்சியும்**

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்பின் 1946ல் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் நிலச்சீர்திருத்தம் ஒன்றைக்கொண்டு வருவது அவசியமாயிற்று. இது ஒரு தேசிய பொருளாதார சமூக தேவையாக அமைந்தது. 1946க்கு முன் நாஸி ஆட்சியின்கீழ், சமூகம் பெரும் ஏற்றத்தாழ்வு கொண்டதாக அமைந்திருந்தது. பெருநிலச் சொந்தக்காரர் ஆதிக்கம் அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் அதிகமாக இருந்தது. இரண்டாம் உலக மகாயுத்தத்தை ஆரம்பிப்பதற்கு இப்பெருநிலச் சொந்தக்காரரும், தன உரிமை முதலாளிகளும் பெரிதும் காரணமாக இருந்தனர்.

1939க்கும் 1945க்கும் இடையில் நாட்டின் விவசாயத்துறையில் 1·1 வீதமாக இருந்த பெருநிலச் சொந்தக்காரர்(240 ஏக்கர் நிலத்திற்குமேற் படைவைத்திருந்தோர்) நாட்டின் மொத்த விவசாயநிலத்தில் 28·3 வீதத்தை தமக்குக் கீழ் வைத்திருந்தனர். அதே நேரத்தில் 90 வீதமாக இருந்த சிறுநில விவசாயிகள் நாட்டின் மொத்த விவசாயநிலத்தில் 40·8 வீதத்தை மாத்திரம் வைத்திருந்தனர். இதை விட குத்தகைக் குடியானவர்களும் நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளும் பெருமளவில் இருந்தனர்.

யுத்தத்தின் காரணமாக ஜேர்மன் ஜனநாயகக் குடியரசுப்பகுதி
பாதிக்கப்பட்
இப்பாதிப்பு
துறையில் பெரு
இருந்தது. யுத்
திற்கு முன்பு இரு
கையில் கால்ந
30%, பன்றிக
ஆடுகளில் 58% ய
த்தில் அழிவுற்ற
நிலங்களில் முன்
கொண்டுவருவது
தின் காரணமாக
பட்டிருந்தது. யு
பாட உற்பத்
கவனம் செலுத்
தால் விவசாய
கள் அதிகம் இரு
சிறுநில விவசாயி
மளவிற்குக் கு
மாடுகள் மு
றையே விவசாய
பயன்படுத்தினர்.
குறிப்பிட்ட கா
ஞல் விளைச்சலும்
குறைந்திருந்தது.

யுத்தத்திஞல்
பொருளாதாரம்
திருந்தமையாலும்
திரங்கள் மற்றும்
திச்சாதனங்களின்
பாட்டினுலும் சிறு
சாயத்தின்மூலமே
ந்த விவசாயத்து
சீர்செய்து கட்டி
முடியும் என்பன
உணர்ந்தது. க
திருத்தத்தின் மூ
மற்ருேருக்கும்,

# கூட்டுறவு முகாமைச்

கேள்வி: எக்காரணங்களுக்காக நிறுவப்பட்டுள்ளது?

பதில்: நாடு முழுவதும் பலம் வாய்ந்த கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்பட்டதன் மேல், சிறந்த முகாமை முறை ஒன்றிற்கு அமைய அவற்றினை வழி நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு முகாமை விடயங்கள் சம்பந்தமாக ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நிறுவனங்கள் இருக்கின்ற போதிலும் எமது நாட்டில் அத்தகைய அமைப்புக்கள் இருக்கவில்லை. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்காகவே கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. ஆதலால் மிகச் சிறந்த முகாமை முறையினை உபயோகிப்பதன் மூலம், கூட்டுறவு இயக்க சேவையின் தரத்தினை மேம்படுத்தலும், சிக்கனத்தினை கடைப்பிடிக்க உதவுவதுமே இந்நிலையத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

கேள்வி: நிலையத்தின் நோக்கங்கள் இவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டனவா?

பதில்: இல்லை, 'கூட்டுறவு' முறை தனியார் துறையைவிட மாறுபட்ட ஒரு அமைப்பு என்பது அதன் பெயரிலிருந்தே தெரியவருகின்றது, கூட்டுறவு இயக்கம், உறுப்பினர்களின் நலனை முன்னிட்டு உறுப்பினர்களினுல் நடத்தப்படுகின்ற ஒரு அமைப்பாகும். இதன் வெற்றிக்கு ஊக்கத்துடன் உழைக்கக் கூடிய உறுப்பினர்களின் பங்கு அத்தியாவசியமானது. ஆதலால் ஊக்கத்துடன் உறுப்பினர்கள் செயற்படுவதற்கு ஒத்துழைப்பு அளிப்பதும் இந்நிலையத்தின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்ருகும்.

கேள்வி: இந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்நிலையம் எந்த வகையில் இயங்குகின்றது?

பதில்: இந் நிலையம் முக்கியமாக ஆலோசகர் பிரிவொன்றினையும் பொது சனத் தொடர்பு சாதன, புள்ளி விபரத் திரட்டு பிரிவொன்றினையும் உள்ளடக்கியது. கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தேவையான முகாமை ஆலோசனைகளை வழங்குதலும், இயக்கத்தினை எதிர்நோக்கியுள்ளனவும், நாட்டிற்கு பொது முறையில் அமைந்தனவுமான பிரச்சினைகளுக்கு பதிலளிப்பதும் ஆலோசகர் பிரிவினை சார்ந்த விடயமாகும். நிலையத்தின் திட்டங்கள் சம்பந்தப்பட்ட பிரசுரங்கள், பொதுப் படையாக கூட்டுறவு இயக்கத்திற்கு பயனளிக்கக் கூடிய பிரசுரங்கள் என்பனவற்றைப் பிரசுரித்தல், பயிற்சிப் பாடத் திட்டங்களைத் தயாரித்தல், கூட்டுறவு கல்வி விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், முகாமை விடயங்கள் சம்பந்தப்பட்ட வாசிகசாலை ஒன்றினை நடாத்துதல் என்பன புள்ளி விபரத் திரட்டு, பொதுசன தொடர்பு சாதன பிரிவினுல் மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களுள் சிலவாகும். நுகர்வு, விவசாய, கைத்தொழில், முகாமை, கணக்கியல் போன்ற விடயங்கள் சம்பந்தப்பட்ட பொறுப்புக்களை ஒப்படைப்பதற்காக ஆலோசகர் பிரிவு மேலும் சிறு உப பிரிவுகளாக பகுக்கப்பட்டுள்ளன. எனினும் ஏதாவது ஒரு திட்டத்தினை மேற்கொள்ளும்போது அதன் தேவைகளுக்கு ஏற்ப அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவமுடையவர்களினது உதவியும் பெற்றுக் கொள்ளப்படும்.

**ஒல்கட் குணசேகரா**
தலைவர்
கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம்

கேள்வி: இந்நிலையம் எந்த வகையில் அமைக்கப்பட்டுள்ளது?

பதில்: சர்வதேச ஒத்துழைப்புடன் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கம் சுவீடன் நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் சர்வதேச தொழில் நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒரு ஒப்பந்தத்திற்கு அமைய இந்நிலையம் உருவாக்கப்பட்டது. இலங்கையின் கூட்டுறவு இயக்கத்திற்கு தேவையான முகாமை ஆலோசனைகளை வழங்குவதற்கான நிரந்தர நிலையமொன்றினை உருவாக்குதல் இவ்வொப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும்.
திற்கு உட்பட்ட
பகுதிக்குள் இத
தர நிலையமெ
மாற்றுதற்கு ச
மான ஏற்பாடுகள்
படுவதுடன் ஒப்ப
காலக்கெடு மு
இன்ற சந்தர்ப்பத்
தேச உதவியும் மு
யும். இப்பொழுது
உத்தியோகத்தர்
டன் பல்வேறு
லும் இணைந்து
புரிகின்ற சர்வதே
ழில் நிறுவன
ளின் சேவையும் அ
முடிவு பெறும்.

கேள்வி: இந்
ஏனைய கூட்டுறவ

(முற்றொடர்)

# கூட்டுத்திறத்தால் நாட்

69. அரசு நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுடன், இயக்குமதிப்பொருட்களின் விநியோகத்திலும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டுமென பிரேரிக்கின்ருேம்.

70. 1973 செப்டம்பப் 30ந் திகதி நடு இரவிலிருந்து சீனியின் விலை ஏற்றப்பட்டதனுல், அதன் மேலதிகத்தைத் தருமாறு கேட்டுள்ள உணவு ஆணையாளரது வேண்டுகோள் நியாயமற்றதென்பதை எடுத்துக் காட்டுவதுடன், அம்மேலதிக தொகை,உணவு ஆணையாளருக்குச் செலுத்தப்படக் கூடாதெனவும் இது சம்பந்தமாக அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு தீர்பானத்தைப் (மேலதிகத்தைச் செலுத்தாமல் இருக்க) பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் பிரேரிக்கின்ருேம்.

71. கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் கூட்டங்களுக்கு வருகை தருகின்ற உறுப்பினர்களுக்கு செலுத்தப்படுகின்ற 10/- ரூபாவிற்கான பிரயாணச் செலவு எந்த வகையிலும் போதுமானதாக இல்லாததுடன் சங்கங்கள
தரம், விற்பனை,
கைகள் என்பன
கவனத்திற்கொண்
25/- ரூபாவரை அ
மாறு ஆணையா
சேட்கவேண்டுமெ
ரிக்கின்ருேம்.

72. உணவு
களத்தினதும், ஏனை
திணைக்களங்கள
கொண்டு செல்லல்
களை மட்டுப்படுத்த
கொழும்பு கூட்
கொண்டு செல்லற்
திடம் ஒப்படைக்
இச்சபை அரசாங்க
வேண்டுகின்றது.

# ...டியரசில்

டியரசுப்பகுதி பெரிதும்
திக்கப்பட்டிருந்தது.
ப்பாதிப்பு விவசாயத்
றையில் பெருமளவிற்கு
ருந்தது. யுத்த காலத்
ற்கு முன்பு இருந்த தொ
கயில் கால்நடைகளில்
%, பன்றிகளில் 66%,
டுகளில் 58% யுத்த கால
தில் அழிவுற்றன. விளை
லங்களில் முன்னேற்றம்
காண்டுவருவது யுத்தத்
ன்காரணமாகத் தடைப்
ட்டிருந்தது. யுத்த தள
ட உற்பத்தியிலேயே
வனம் செலுத்தப்பட்ட
ால் விவசாய இயந்திரங்
ள் அதிகம் இருக்கவில்லை.
றுநில விவசாயிகள் பெரு
ளவிற்குக் குதிரைகள்.
ாடுகள் முதலியவற்
றயே விவசாயத்திற்குப்
யன்படுத்தினர். மேற்
றிப்பிட்ட காரணங்களி
ல் விளைச்சலும் பெரிதும்
றைந்திருந்தது.

யுத்தத்தினால் நாட்டின்
பாருளாதாரம் சீர்குலைந்
ருந்தமையாலும், இயந்
ரங்கள் மற்றும் உற்பத்
ச்சாதனங்களின் தட்டுப்
ாட்டினாலும் சிறுநில விவ
ாயத்தின்மூலமே சீர்குலை
த விவசாயத்துறையைச்
ர்செய்து கட்டியெழுப்ப
டியும் என்பதை நாடு
ணர்ந்தது. காணிச்சீர்
ருத்தத்தின் மூலம் நில
ற்றோருக்கும், குறைந்த

நிலம் உடையோருக்கும் நிலம் வழங்குவதால், சிறு விவசாயிகளினதும், விவசாயத் தொழிலாளிகளினதும் ஆர்வத்தைத் தூண்டி நம்பிக்கையைப் பெற்று உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதை அரசாங்கம் உணர்ந்தது. இதைவிடப் பெருநிலச் சொந்தக்காரரின் ஆதிக்கத்தைக் குறைத்து உண்மை ஜனநாயகத்தைக் கிராமியப் பகுதிகளில் நிலைநாட்டவும், யுத்தத்தினால் சீவனோபாயம் இழந்தோருக்கு வாழ்வளிக்கவும் நிலச்சீர்திருத்தம் அவசியமாயிற்று.

ஆகவே, 1946ல் சிறு நில விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள் முதலியோருடைய ஆதரவுடன் நிலச் சீர்திருத்தம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. பெருநிலச் சொந்தக்காரரதும், நாஸிய யுத்தக் குற்றவாளிகளினதும் நிலங்கள் சுவீகரிக்கப்பட்டு நிலமில்லாதோரிடையிலும், நிலம் குறைந்தோரிடையிலும் பங்கீடு செய்யப்பட்டது. இச் சீர்திருத்தத்தின்மூலம் சிறு நில விவசாயிகள் நாட்டின் மொத்த விவசாய நிலத்தில் 63 1 வீதத்தைப் பெற்றனர்.

நிலச்சீர்திருத்தத்தின் பின்னர் விவசாயத்தை விருத்தி செய்யவும், சிறு நில விவசாயிகளின் நிலையைப் பலப்படுத்தவும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் முதல் நடவடிக்கையைச் சிறுநில விவசாயிகள் தாமாகவே மேற்கொண்டனர். தங்களுக்குள் தாங்களே உதவி என்ற அடிப்படையில் பரஸ்பர உதவிக் குழுக்களையும் அமைக்கத் தொடங்கியதும் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை மீள நிறுவத் தொடங்கியதுமே இம்முதல் நடவடிக்கையாகும். யுத்தத்தினால் உற்பத்திக் கருவிகள் இழுவை மிருகங்கள், ஆள் பலம் முதலியன ஒவ்வொரு விவசாயியைப் பொறுத்தவரையிலும் வெவ்வேறு அளவுகளில் குறைந்திருந்தன.

# விவசாயக் கூட்டுறவு

ஆகவே இவர்கள் முதலில் தங்களுக்குத் தாங்களே உதவி என்ற முறையில் தமக்கிடையில் இவற்றைக் கொடுத்துப் பரிமாறி தமது உற்பத்தியை விருத்தி செய்ய முயற்சி செய்தனர்.

கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஜேர்மனியே பிறப்பிடமாக இருந்தாலும், 1945 வரையில் விவசாயக் கூட்டுறவு உட்பட, கூட்டுறவு ஜேர்மனியில் சீரழிந்த நிலையில் இருந்தது. சமூக உடமைக் கருத்துக்கள் வளர கூட்டுறவு இடமளிக்கக்கூடிய ஒரு இயக்கமாக இருந்தமையால் ஹிட்லரும் அவரது நாஸியக் கட்சியினரும் கூட்டுறவு இயக்கத்தை ஜேர்மனியில் நசுக்கினர். எனவே நாஸிகள் தோற்கடிக்கப்பட்ட பின் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் மீள நிறுவ வேண்டி ஏற்பட்டது. பின்வரும் காரணங்களுக்காக விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை மீளமைப்பது அவசியமாயிற்று.

(i) நிலச்சீர்திருத்தத்தை நிலைபெறச் செய்வதற்கு

(ii) விவசாயிகளை ஜனநாயக வாழ்க்கைக்குப் பழக்கப்படுத்துவதற்கு

(iii) எவ்வளவு கூடுமோ அவ்வளவு கூடிய விரைவில் விவசாய உற்பத்தியைப் பெருக்க

(iv) கறுப்புச் சந்தை, கடுவட்டிக்குப் பணம் கொடுப்போர் முறை என்பவற்றை எதிர்த்துப் போராட.

இந்த மீளமைப்பு விவசாயிகளினதும், தொழிலாளிகளினதும், சோவியத் யூனியனின் தற்காலிக அரசாங்கத்தினதும் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டது. இம்மீளமைப்புக்கு சட்ட அடி நிலையாக தற்காலிக அரசாங்கம் விடுத்த கட்டளை அமைந்தது. இக்கட்டளையினால் நாஸி அரசாங்கத்தினால் கூட்டுறவு இயக்கத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டன. சட்ட ரீதியாக மீண்டும் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க இடமளிக்கப்பட்டது. இதைவிட இக்கட்டளை விவசாய அபிவிருத்திக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்ய அனுமதி அளித்தது. இக்கட்டளைச்சட்டத்தின் காரணமாக விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களை மீளமைப்பது விரைவாக நடைபெற்றது.

1945க்குமுன் நாஸிய ஆட்சிக்காலத்தில் ஓரளவுக்கிருந்த கூட்டுறவுச் சங்கங்களும், அதற்கு முன் பிருந்த கூட்டுறவுச் சங்கங்களும் உண்மை ஜனநாயக அமைப்புக்களாக இருக்கவில்லை. பெருநிலச் சொந்தக்காரர்களும், பெருவசதி படைத்தோருமே இதில் ஆதிக்கம் செலுத்தினர். ஆகவே, முதலில் மீளமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களை உண்மை ஜனநாயக அமைப்புக்களாக ஆக்கவேண்டியது அவசியமாயிற்று. இதற்கு முதல் நடவடிக்கையாக சங்கங்களில் இடம்பெற்றிருந்த நாஸிகள் வெளியேற்றப்பட்டனர். (நிலச்சீர்திருத்தத்துடன் பெருநிலச் சொந்தக்காரர் முறை அகற்றப்பட்டது) சிறு நில விவசாயிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்ட நிருவாகக் குழுக்கள் அமைக்கப்பட்டன. உபவிதிகள் திருத்தி அமைக்கப்பட்டன. இந்நடவடிக்கைகளினால் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு அவை உண்மை ஜனநாயக அமைப்புக்களாக மாறின.

இம்மீளமைப்பில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூராட்சியினரதும், அரசாங்கத்தினதும்உதவியைப் பல வழிகளில் பெற்றனர். இவை தனிப்பட்ட விவசாயிகளிலும் பார்க்க கூட்டுறவு விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தல், உற்பத்திச் சாதனங்களைப் பெறல், உற்பத்தியைப் பதப்படுத்தல் முதலிய விடயங்களில் சலுகைகள் அளித்து அவற்றிற்கு முக்கிய இடம் கொடுத்தன.

அரசாங்கம் தனது விலைக்கொள்கை, உற்பத்திக்கையளிப்பு முறை என்பவற்றைக் கறுப்புச்சந்தையை ஒழிக்கவும், கூட்டுறவை வளர்க்கவும் சாதகமாகப்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

---

நோக்கமாகும். ஒப்பந்தத்
திற்கு உட்பட்ட காலப்
பகுதிக்குள் இதனை நிரந்
தர நிலையமொன்றாக
மாற்றுதற்கு சட்டபூர்வ
மான ஏற்பாடுகள் செய்யப்
படுவதுடன் ஒப்பந்தத்தின்
காலக்கெடு முடிவடை
கின்ற சந்தர்ப்பத்தில்சர்வ
தேச உதவியும் முடிவடை
யும். இப்பொழுது தேசிய
உத்தியோகத்தர் குழுவு
டன் பல்வேறு பிரிவுகளி
லும் இணைந்து கடமை
புரிகின்ற சர்வதேச தொ
ழில் நிறுவன நிபுணர்க
ளின் சேவையும் அத்துடன்
முடிவு பெறும்.

கேள்வி: இந்நிலையம்
ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில் இயங்குகின்றதா?

பதில்: இல்லை. மூகாமை ஆலோசனை வழங்குவது விசேட பிரிவைச் சார்ந்த ஒரு விடயமாகும். ஆதலினால் ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுடன் போட்டியிடுவது சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட வழியில்லை. அத்துடன் நிலையத்தின் சேவைகள் பொதுத் தேவையினையும், கேள்வியினையும் பொறுத்ததாகவே உள்ளது. ஆகவே கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவி ஒத்தாசைகள் வழங்குகின்ற ஒரு நிறுவனமாகவே இந்நிலையம் விளங்குகின்றது.

கேள்வி: இந்நிலையம் நிறுவப்பட்டது முதல் (கடந்த இரண்டரை வருடங்களுக்குள்) இதன் சேவைகள் எந்த வகையிலான நிறுவனங்களுக்கு

# சேவைகள் நிலையம்

வழங்கப்பட்டுள்ளன? எத்தகைய சேவைகள் வழங்கப்பட்டுள்ளன?

பதில்: பொதுப்படையாக முழு நாட்டிற்கும் பொதுவானதும், கூட்டுறவு இயக்கத்தினைப் பெரிதும் பாதித்துள்ளதுமான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள வகையில் இந்நிலையம் செயற்பட்டுள்ளது. கூட்டுறவு விற்பனை நிலையங்களின் 'கியூ' வரிசைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வேலைகள், கூட்டுறவு விற்பனை நிலைய ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு முறை, விற்பனை நிலையங்களில் 5 கிழமைகள் வரை அதன் சகல பிரிவுகளையும் உட்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வேலைகள் என்பன சில முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ள உதவியதோடு, விதப்புரைகள் வழங்குவதிலும் துணை புரிந்தன. இவற்றின் பயனாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட புதுச் சிட்டை முறையையும், பலவித சேவை முறையையும் சிற்சில திருத்தங்களுடன் தீவு முழுவதிலும் நடைமுறைப்படுத்த கூட்டுறவு திணைக்களம் முன்வந்தது. 'கிளை' விற்பனை நிலைய ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு முறை, பங்கீட்டிற்குள் அடங்காத பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கு கூடுதலாக சேவை செய்தல் என்பன ஹோமகமையில் பரீட்சார்த்த முறையில் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இலங்கை முழுவதிலும் இவற்றினை நடைமுறைப்படுத்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. பல்வேறு விநியோக நிலையங்களிலிருந்து பொருட்களைப் பெற்றுக் கொள்ள வேண்டி நேரிட்டுள்ளமையால் கூட்டுறவுச் சங்கங்களை எதிர்—நோக்கியுள்ள பல்வேறு விதமான பிரச்சினைகள், பெருந் தொகையிலான கொண்டுசெல்லற் செலவுகள், சிக்கனமற்ற முறையில் அமைந்த பண்டப் பங்கீடு என்பவற்றினால் வருடா வருடம் நாட்டை எதிர் நோக்குகின்ற வீண் விரயத்தினை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வேலைகளின் பிரதிபலனே இக் கூட்டுறவு மாவட்ட களஞ்சிய முறையாகும்.

இவற்றினைவிட கூட்டுறவு இயக்கத்தின்பால் பெரும் செல்வாக்குச் செலுத்தக் கூடிய வகையிலான தலைமைச் சங்கங்களுடனும் எமது நிறுவனம் ஒத்துழைத்துள்ளது. 1973/74 வருட பெரும் போகத்தின் போது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உர விற்பனை (பசளை) திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த ஸ்ரீலங்கா சந்தைப் படுத்தல் சங்கத்திற்கு உதவியமை, சிறு ஏற்றுமதி பொருட்களை சேகரித்தல், விற்பனை செய்தல் திட்டமொன்றினை கலகெதர பகுதியில் அறிமுகப்படுத்தவும், அதன் பின்னர் ஒப்பந்த முறையிலான விவசாயத் திட்டமொன்றின் அடிப்படையில் சிறு ஏற்றுமதி பொருட்களுக்கான வேலைத் திட்டமொன்றினை அதே பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக சந்தைப்படுத்தல் சங்கத்துடன் ஒத்துழைத்தமை. கூட்டுறவு கைத்தொழில் சங்கத்தின் தொழிற் சாலையினை பன்முகப்படுத்தப்பட்ட ஒரே அலகாக விருத்தி செய்யவும், நாள்தோறுமான உற்பத்திச் செலவுகளை கணித்தல் சம்பந்தமாகவும் அதே சங்கத்திற்கு ஆலோசனை சேவை வழங்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

தமிழில்: எம் கே. எம். நாளிர்

---

# நாட்டைப்பாலித்திட

துடன் சங்கங்களது தாரா
தரம், விற்பனை, நடவடிக்
கைகள் என்பனவற்றைக்
கவனத்திற்கொண்டுஇதனை
25/- ரூபாவரை அதிகரிக்கு
மாறு ஆணையாளரிடம்
கேட்கவேண்டுமென பிரே
ரிக்கின்றோம்.

72. உணவு திணைக்
களத்தினதும், ஏனைய அரச
திணைக்களங்களினதும்
கொண்டு செல்லல் விடயங்
களை மட்டுப்படுத்தப்பட்ட
கொழும்பு கூட்டுறவு
கொண்டு செல்லற் சங்கத்
திடம் ஒப்படைக்குமாறு
மந்திரிச்சபை அரசாங்கத்திடம்
வேண்டுகின்றது.

73. லொறி உரிமையாளர்கள் சிலர் ஒன்று சேர்ந்து கொழும்பு கூட்டுறவு கொண்டு செல்லற் சங்கத்தின் விடயங்களைச் சிதைக்கும் நோக்கத்துடன் லொறி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கமொன்றினை நிறுவ ஒழுங்குகள் செய்வதுடன், இவ்வாறு செய்யப்படுவதன்மூலம் கூட்டுறவு இயக்கம் பெரிதும் பாதிக்கப்படுவதனால் இதனைத் தடுக்குமாறு கௌரவ கூட்டுறவு அமைச்சர் அவர்களிடம் வேண்டிக்கொள்கின்றோம்.

74. மட்டுப்படுத்தப்பட்ட கொழும்பு கூட்டுறவு கொண்டு செல்லற் சங்கத்தினை அகில இலங்கை கொண்டு செல்லற் சங்கமாகப் பதிவு செய்யுமாறு அச்சங்கத்தினால் கூட்டுறவுத் திணைக்களத்திடம் கேட்கப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றிக் கொடுக்கும்படி திணைக்களத்திடமும், கூட்டுறவு அமைச்சர் அவர்களிடமும் தயவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

(வளரும்)

(நாடகம்)

# வாழையடி வாழை

### முதலாவது காட்சி

*[எண்பது வயதை அடைந்துவிட்ட அண்ணாவி வைரவன் தமது பழைய கால நிகழ்ச்சிகளை இரைமீட்டுப் பார்க்கிறான்]*

பாடல்

ஆகாய வீதிதனில் அம்புலிமான் பால்சொரிய
வாகாய் இளங்காற்று வந்து வந்து தொட்டணைக்க
எத்தனைதான் இன்பம் அட, எத்தனையோ சிந்தனைகள்
அத்தனையும் இங்கு ஆடுகட்டும் அட்டாலை
தந்த சுகமோ? தனிமையோ நான்அறியேன்
எந்த வித மானாலும் என்மனது துள்ளுததே
மாமரங்கள் சூழ்ந்து மருதமரம் மொய்த்திருக்கும்
சீரான ஊர் மருதம் சேரிஇந்நாள் மாறியதே
அண்ணாவி வைரவன்நான் ஆ! நானும் மாறிவிட்டேன்
எண்பதையும் தாண்டி என்வயதும் போனதுவே
அந்தநாள் நாங்கள் அரிசிதனைச் சோறாக்கித்
தின்றதே இல்லை; தினை சாமை நற்குரக்கன்
பிட்டும் மரவளியும் பிடித்துவிட்டுச் சாமமது
தொட்டு விடியும்வரை துலாஉழக்கி வாழ்ந்திருந்தோம்
ஆனாலும் என்னகுறை? அண்ணாவி கந்தப்பு
தேனாகப் பாடி செய்வித்த பொற்கொடியாள்
கொட்டகையின் கூத்தோ கோடிபெறும் வாலிபர்கள்
வட்டமாய் நின்று வசந்தன் அடித்தார்களென்றால்
எட்டப் புழுதி எழும் எப்படியோ பேய்மழைதான்
கட்டாயம் வந்துவிடும்; கண்ணுடைய மாரியின்மேல்
உடுக்கடித்துப்பாடி உரோமஞ் சிலிர்க்க அண்ணன்
எடுத்து வரும் கரகம் எங்கள்தலை ஆட்டுவிக்கும்
வாழையடி வாழையென வந்த அண்ணாவிப்புகழால்
தாளம் அதை எடுத்துச் சன்னதியான் வாசலிலே
ஏலேலோ போட்டாடும் என்கப்பல் காவடியை
ஆராமையோடு ஆயிரம் பேர் பார்த்திருப்பார்
காவடியும் கூத்தும் கனவசந்தனும் உடுக்கும்
மாமரியின் பாட்டும் மறைந்தனவே ஆனாலும்

**★ இரசிகமணி கனக செந்திநாதன் ★**

ஆற்றின் கீழ் ஓடும் அரும் ஊற்றுப் போல இங்கு
போற்றும் கலைகள் இன்னும் பூண்டற்றுப் போகவில்லை
நேற்றுந்தான் என்பேரன் நின்றபடி சொன்னகதை
கேட்டுக் கிழவன் நான் கிளுகிளுப்புக் கொண்டுவிட்டேன்
கல்லூரி மேடையிலே காவடி ஆட்டம் போட்டு
எல்லோரும் மெச்சிடவே இசை பரப்பப் போறானும்
வாழையடி வாழையென வந்த புகழ் பேரனுக்கு
வாய்க்குமோ இல்லை மறைந்ததுதான் போய்விடுமோ?
நாட்டில் புதுமை எல்லாம் நம்தாளக் காவடியில்
பாட்டில் புதுமை என்று பாழ் செய்யப் போறானோ?
என்ன சத்தம் அங்கு இருமலுடன் வருபவர்யார்?
சின்னப் பொடியனுடன் சேர்ந்து...

### இரண்டாவது காட்சி

*[வைரவன், நல்லான், சின்னப்பொடியன் என்னும் கதிரை வேலன் ஆகிய மூவரும் உரையாடுகின்றனர்]*

**வைரவன்:** ஆர் வாறது இந்த நேரத்தில்...

**நல்லான்:** அண்ணாவியாரே! நான்தான் நல்லான் கன காலம் உம்மைப்பார்த்து என்ரை மகளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தனான். அதோடை உம்மையும் ஒருக்கால் பார்த்தால் நல்லது என்று நினைச்சேன்.

**வைரவன்:** நல்லது .. நல்லது வா வா நான் இங்கை இருக்கிறேன் என்று ஆர் சொன்னது? என்ரை இளைய மகன் சின்னப் பொடியன் கூட்டி வந்தவனே. தூரத்திலை வாறபொழுதே அவன்ரை இருமல் கூடக் கேட்டுது. சரி நல்லான், இந்த அட்டாலைதான் என்வீடு ஏறி இரு.

**நல்லான்:** அண்ணாவியாரே! சின்னப்பொடியன் என்கிறீர் கதிரைவேலனை அவனுக்கே ஐம்பதுக்கும் மேலாச்சுதே

**கதிரைவேலன்:** அப்பு என்னை இப்பவும் சின்னப்பொடியா என்றுதான் கூப்பிடுறார். பழக்கம் இன்னும் மாறவில்லை.

**வைரவன்:** டே! சின்னப்பொடியா! இவர் ஆர் தெரியுமே. மாஞ்சோலை நல்லான். அந்தக் காலத்திலை என்ரை தாளக்காவடிக்குப் பிற்பாட்டுப் பாடியவர். நல்லாப் பாடுவார் அந்தக் காலத்திலை.

**கதிரைவேலன்:** இவரைத் தெரியாதே எனக்கு நாங்கள் காவடி எடுக்கும்போது கூட இவர்தான் பாடினார். ''தா அருளைத் தருணமின்றடியவர்க்கு'' என்ற பல்லவியை நீங்கள் பாடும்போது கூட இவர் அருமையாகப் பிற்பாட்டுப் பாடுவார். இப்ப மறந்து போனாரோ? என்னவோ?

**நல்லான்:** என்ன மறதி எனக்கு? இப்ப அறுபத்திரண்டு வயதுதானே ஆகுது. கடைசியாக அண்ணாவியார் பழக்கிய தாளக்காவடி ஆட்டத்திற்கும் என்னைத் தானே பிற்பாட்டுக்காரராக வைச்சார் என்னமாதிரி உற்சாகமாகப் பாடினேன். இப்ப தொண்டைகட்டிப் போச்சு. பாடச் சரியாக வருகுதில்லை. இப்ப எல்லாம் சினிமாப்பாட்டுத்தானே பாடுறாங்கள். அந்தக்காலத்திலை நாங்கள் 'ஈராறுகாதிலே' 'வாழையடி வாழையென' 'கோடையிலே இளைப்பாற்றி' மானுட மழுவாட' 'பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை ஒழித்து' 'மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்' என்றெல்லாம் சுவாமிப் பாட்டுக்களாகத்தான் பாடுவோம். இப்ப என்னபாட்டுக்கள்? கேட்க அருவெருப்பாயிருக்கு.

**கதிரைவேலன்:** பின்பாட்டுக்காரரே! நீர்தான் படிக்கவே இல்லை. உந்தப் பாட்டுக்களை எல்லாம் எப்பிடிப் பாடமாக்கினீர். ஆரேன் சொல்லித்தந்தவையே.

**நல்லான்:** (சிரித்தபடி) கேட்டீரே அண்ணாவியாரே உன்ரை மகனின்ரை கேள்வியை. ஆர் எங்களுக்குச் சொல்லித் தந்தவை. பள்ளிக்கூடத்திலை எங்களைப் படிக்க விட்டவையே, உலகப் பள்ளியிலைதான் படிச்சோம். நாடகக் கொட்டகையிலை சிலதைப் பாடமாக்கினோம். கோயில் திருவிழாவிலை சிலதைக் கேட்டோம். அந்தக் காலத்திலை கோயில்களிலை எல்லாம் சின்னமேளக்காரிகள் நல்லா ஆடுவினம்; பாடுவினம். பண்டுருட்டி என்றொரு சின்னமேளக்காரி வந்தா. அவ ஆடுறதில்லை. அவளின்ரை தேகம் இடங்கொடாது. நல்லாப்பாடுவா. ஒலிபரப்பி இல்லாத அந்தக் காலத்திலைகூட அவ பாடினா வீதி எல்லாம் கேட்கும். அவ ஒரு கோயிலுக்குப் பாட வாறா எண்டால் பத்துக்கட்டை தூரமெண்டாலும் நடந்து போய்க் கேட்போம்.

**கதிரைவேலன்:** அவவின்ரை மகள் கூடச் சினிமாவிலை பாடியிருக்காம். பெரியநாயகி என்று பேராம். நல்ல சாரீரம் எடுப்பான குரல்

**வைரவன்:** அதைத்தான் மோனே வாழையடி வாழை என்று சொல்லுறது. புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? பரம்பரைச் சொத்து அது.

**நல்லான்:** பாட்டென்றால் பண்டுருட்டி அம்மா பாட்டுத்தான். பக்திப் பாட்டாகப் பாடுவா. சுவாமியை விடியும் நேரத்திலை வடக்கு வீதியில் நிற்பாட்டிவிட்டு அவவைப் பாடவைப்பார்கள். என்ன மாதிரித் தேனாகப் பொழிவா அந்த அம்மா. அதைக் கேட்டுக் கேட்டுத்தான் நான் பாடத் தொடங்கினேன்.

**கதிரவேலன்:** அப்பு எங்களுக்குமெல்லாம் தாளக் காவடி ஆட்டத்தைப் பழக்கித் தன்ரை அண்ணாவிப், பரம்பரையை வாழையடி வாழையாகக் காத்தமாதிரி நீரும் உங்கடை மக்களுக்கு இந்தச் சுவாமிப் பாட்டுகளைச் சொல்லிக் கொடுத்திருக்கலாமே.

**நல்லான்:** அவங்கள் என்னைப் போலையே. நாலெழுத்துப் படிச்சவங்களாச்சே. சினிமா சினிமா எண்டு உயிரை விடுகிறாங்கள் சின்னக்குழந்தையள் கூடக் ''காதலிலே தோல்வியுற்றாள் கன்னி ஒருத்தி'' எண்டெல்லாம் பாடுதுகள். சுவாமிப்பாடலாகப் பாடுங்கோ எண்டால் சிரிக்குதுகள். காலம்மாறிப்போச்சு எங்களோடை அந்தப் பாட்டுக்களும் போகவேண்டியதுதான்.

**கதிரைவேலன்:** இதுக்குத் துக்கப்பட்டு என்ன பயன்? புதுசாகவும் இலகுவாகவும் கவர்ச்சியாகவும் இருந்தா எல்லாரும் அதை விரும்புவினம் தானே. எண்டாலும் பழசையும் விடப்படாது. நீங்கள் அந்தக்காலத்திலை பாடின ''மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்'' என்ற பாட்டைப் போல ஆர் பாடுகினம்? ஒருக்கா இப்பவும் பாடுங்கோ கேட்க ஆசையாய்இருக்கு.

**நல்லான்:** என்னத்தைப் பாடுறது தம்பி! குரல் கெட்டுப் போச்சு. குயில் குரல் அப்ப. இப்ப கோட்டான் குரல் மாதிரி. எண்டாலும் நீ கேக்கிறாய். பாடிக்காட்டிறன். கேள்.

மரகத வடிவம் செங்கதிர் வெயிலால்
வாகாய் வாடாதோ?
மதிமுகம் முழுதும் தண்துளி தரவே
வார் வேர் சோராதோ?
கரமலர் துணைதந் தின்புறு மடவார்
காணாதே போமோ?
கனமணி குலவும் குண்டலம் அரைஞா
ணோடே போனால் வார்
பொருமிய முலை தந்தின்புறு மடவார்
தாய்மார் தேடாரோ
புரவலர் எவரும் கண்டடி தொழுவார்
போதாய் போதா நீள்
சரவண மருவும் தண்டமிழ் முருகா
தாலே தாலே லோ
சதுர் மறை பரவும் செந்திலை உடையாய்
தாலே தாலே லோ

**வைரவன்:** எடமோனே அந்தக் காலத்திலை இந்தப் பின்பாட்டுக்கார நல்லான் ''சரவண மருவும் தண்டமிழ் முருகா என்ற இடத்திலை ஒரு அழுத்தம் அழுத்தித் ''தாலேதாலேலோ'' என்று பாடுவான். முருகன் எதிரிலே வந்து நிற்பது போல இருக்கும். சனங்கள் சொக்கிப்போய் விடுவினம்.

(வளரும்)

## ராஜிநாமா செய்யும்படி அறிவிப்பார்

கூட்டுறவு மாவட்ட அதிகார சபைகளிலும், நெறியாளர் குழுக்களிலும் இப்போது சேவையாற்றி வரும் அரசாங்க அதிபர்களையும், உதவி அரசாங்க அதிபர்களையும் அவற்றிலிருந்து உடனடியாக ராஜிநாமாச் செய்யும்படி தான் அறிவிக்கப் போவதாகப் பொது நிருவாக வர்த்தக அமைச்சர் மாண்புமிகு T. B. இலங்கரத்ன தெரிவித்திருக்கிறார்.

மேற்படி உத்தியோகத்தர்கள் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுக்களுக்குத் தெரிவு செய்யப்படுவதை ஏற்கக்கூடாதென ஏற்கெனவே தான் அவர்களுக்கு அறிவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அமைச்சர், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு மேலதிக பணிகளை அவர்கள் ஆற்ற வேண்டியிருப்பதால் கூட்டுறவுத் துறையில் சேவை புரிவது சாத்தியமற்றது என்றும் அதன் காரணமாகவே இந் நடவடிக்கையைதான்மேற்கொள்ளவேண்டியிருப்பதாகவும் அவர்தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவாளர் தொகை அதிகரிக்கப்படும்

அடுத்த ஆண்டு தொடக்கம் மாவட்ட கூட்டுறவு அதிகார சபைகள் நிருவாக விதிகளின்கீழ் நியமிக்கப்படும் என்றும், அச்சபைகளில் சேவையாற்றுவதற்குக் கூட்டுறவாளர்கள் தொகை அதிகரிக்கப்படும் என்றும் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இப்போது இயங்கிவரும் மாவட்ட கூட்டுறவு அதிகார சபைகளில் ஒவ்வொரு கூட்டுறவாளர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

## புதிய நெறியாளர்

உணவு கூட்டுறவு சிறு கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு S. K. K. சூரியாராச்சி கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையத்தின் நெறியாளர் குழுவினை நியமித்துள்ளார். திருவாளர்கள் ஆ. ஜி. ஜி. ஒ. குணசேகரா, பி.எஸ். விஜேவீரா, (கூட்டுறவு ஆணையாளர்) எம். ஆ. பி. தாஸ்வத்த (தலைவர், தேசீய கூட்டுறவுச் சபை) ஆர். எச். பி. பெர்னாண்டோ, ஆர் ஐ. ஒபேசேகரா (தலைவர், கூ. மொ. வி. நிறுவனம்) சி. டி. சில்வா, எல். எம். வி. டி. சில்வா (தலைவர், கூட்டுறவு சந்தைப்படுத்தும் சம்மேளனம்) ஆகியோர் கொண்ட இக்குழுவிற்கு திரு. ஆர். ஜி. ஜி.ஒ. குணசேகரா தலைவர்.

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடற்றொழில் விருத்தியும் நாட்டுவளர்ச்சியும்

எந்த நாட்டிலாவது கரையோர வசதிகளும், குளங்களும், ஏரிகளும் இருக்குமாயின் அந்த நாட்டில் மீனைப்பிடித்து அதன் மூலமாக வருவாய் பெற்றுக் கொள்வதற்குப் பெருத்த வாய்ப்புண்டு. மக்களுக்குச் சத்துள்ள உணவு அளிப்பதற்கு மீன் பிடித் தொழில் மிகவும் ஒரு உன்னத நிலையில் உள்ளது.

இலங்கையில் பன்னிரண்டு கரையோர மாவட்டங்கள் உள்ளன. இவற்றைவிட எத்தனையோ குடாக்களும், குளங்களும், நதிகளும், ஏரிகளும் உள. 1940-ம் ஆண்டு இலங்கையில் கடற்றொழில் சட்டத்தின்கீழ் இத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்காட்டிய ஆண்டுக்குப் பின்னர்தான் கடற்றொழிலில் சங்கங்கள் மூலமாக கடன் வசதிகளும், சந்தைப்படுத்தும் வசதிகளும் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டது.

கூட்டுறவு அடிப்படையில் மீனவர்கள் தங்களது பொருளாதார சமூக கலாசார நலன்களைக் கூட்டுறவுக் கொள்கைகளுக்கு அமைய அபிவிருத்தி செய்வதுடன் அங்கத்தவர் மத்தியில் சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனப் பழக்க வழக்கத்தையும் வளர்ப்பதே குறிக்கோள்களாக உள்ளன. மேற்காட்டிய குறிக்கோள்களைத் தொடர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கம் செயற்படுத்தும் சில அதிகாரங்களை இதன் மேல் குறிப்பிடுவது பொருத்தமாகும். இவ்வதிகாரங்களை உபவிதிக்கு அமையக் கையாள முடியும். உதாரணமாக, சங்கம் நூல்மால், மீன்பிடி, உபகரணங்கள், உள்ளிணைப்பு வெளியிணைப்பு இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், வள்ளங்கள் மற்றும் உபகரணங்கள் முதலியவற்றைக் கொள்வனவு செய்து அங்கத்தவர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கலாம் அல்லது விற்பனை செய்யலாம்.

**பொ. கோவிந்தசாமி**
முன்னாள் கூட்டுறவு
காரியாலயப் பரிசோதகர்

மேற்காட்டியவற்றைச் சங்கம் தனது சொந்தமாக வைத்து அல்லது தொழில் செய்வதற்காக அங்கத்தவருக்கு உதவி செய்யவும் இடமுண்டு. இதைவிட அங்கத்தவருக்குத் தேவையான கடன்கள் அல்லது முற்பணங்களையும் வழங்கலாம். அத்துடன் தொழில் நுட்ப அறிவு வழங்குவதுடன் அங்கத்தவர்கள் கடலில் பிடித்தவற்றைச் சேகரித்து, தரப்படுத்தி பதனிட்டு, சிப்பம் கட்டி ஏற்றிச் சென்று விற்றுக் கொடுக்கவும் இடம் உண்டு. இன்னும் கட்டிடங்கள், வள்ளத் தொழிற்சாலைகள், இயந்திரங்கள், பழுதுபார்க்கும் தொழிற்சாலைகள் முதலியவற்றை அமைக்கவும், கொண்டு நடத்தவும் இச்சங்கங்களுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது இடம் பெயர்ந்து தொழில் செய்யும் அங்கத்தவருக்கு எல்லா வசதிகளைச் செய்து கொடுக்கவும், இடம் பெயர்ந்து தொழில் செய்ய அங்கத்தவரை உற்சாகம் ஊட்டவும், இச்சங்கங்கள் உதவி அளிக்க முடியும். அங்கத்தவர்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய முறையான சேமலாபநிதிகள், ஒய்வுகால நிதிகள் போன்ற ஏனைய நிதிகளையும் உருவாக்கி இவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த முடியும்.

1971-ம் ஆண்டு மீளமைப்புச் செய்யப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 45 ஆகும். இச்சங்கங்கள் செய்யக் கூடியவற்றை மேலே கூறப்பட்டுள்ளது. இன்றைய அளவில் கடற்றொழில் திணைக்களமும் கூட்டுறவுத் திணைக்களமும் இணைந்து இச்சங்கங்கள் மூலமாக இலங்கையில் இருக்கின்ற மீனவர்களுக்குப் பொருளாதார, சமூக, கலாசார நலன்களைச் செய்து கொடுப்பதற்கு முன்வந்துள்ளன. இச்சங்கங்கள் உற்பத்தியை கவனிப்பதுடன் சந்தைப்படுத்தும் தொழிலையும் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த 45 சங்கங்களிலும் ஏறக்குறைய 15,000 மீனவர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளனர். இவர்கள் செலுத்திய பங்குப் பணத்தின் தொகை சுமார் பத்தரை இலட்சம் ரூபாய்க்கு மேலாக இருக்கின்றது

இன்றைய அளவில் இச்சங்கங்களுக்கு உதவியளிக்கக்கூடிய முறையில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் இடம் பெற்றுள்ளது. இவைகள் இறக்குமதி செய்கின்ற நூல்களையும், வலைகளையும் 45 சங்கங்களுக்கு மொத்தமாகவினியோகித்து சங்க அங்கத்தவர்கள் தேவைகளைஒரளவிற்குச் சமாளிக்க எத்தனிக்கின்றன. இச்சங்கங்கள் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வலை வினியோகிக்கும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளன. சிலபகுதிகளில் உள்ள சங்கங்கள் உதாரணமாக நீர்கொழும்பு. பேருவளை பகுதிகளில் உள்ள சங்கங்கள்வள்ளங்களுக்குத் தேவையான எரிபொருள் வினியோகத்தையும்செய்துவருகின்றன. வடமாகாணத்தில் உள்ள சங்கங்களில் ஏழு சங்கங்கள்மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதுடன் சிங்கப்பூர் சந்தையிலே கிராக்கியுள்ள கடலட்டையையும் பிடித்து ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்களின் சிகர தாபனமாகிய வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 1975-ம் ஆண்டு அந்நிய கடலட்டை ஏற்றுமதியால் அன்னிய செலாவணியாக 48½ இலட்சம் ரூபாவை உழைத்துள்ளது. மன்னார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆசியாக் கண்டத்தில் முதன் முதலாக அட்டை பதனிடும் தொழிற்சாலையை பிரதேச அபிவிருத்திச் சபையின் வேலையாக அமைத்துள்ளது. அத்துடன் வள்ளம் செய்யும் தொழிற்சாலை ஒன்றையும், இயந்திரங்கள் பழுதுபார்க்கும் தொழிற்சாலை ஒன்றையும் பிரதேச அபிவிருத்திச் சபைகளின் வேலைகளாக இம்மீனவர் கூட்டுறவுச் சங்கம் பரிபாலித்து வருகின்றது. முல்லைததீவில் இறால் பதனிடும் ஒரு தொழிற்சாலைக்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

(வளரும்)

(முற்றொடர்)

# கூட்டுறவுச் சபை கடந்து வந்துள்ள ஓராண்டு வளர்ச்சிப் பாதை

கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் மாத்திரம் சுமார் 50000 பேர்அளவில் இருப்பதினால் இதன் மூலம் குறிப்பிடத்தக்க ஒரு தொகையைப் பெற்றுக் கொள்ள முடியுமென நம்புகின்றோம். கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ஒரு மாதத்திற்கான கொடுப்பனவை நன்கொடையாகப் பெற்றுக் கொள்ள அபிப்பிராயப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினைப் பெற்றுக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கின்றோம். கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக 22 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையினர் இருப்பதனால், இவர்களிடமிருந்து சிறு அளவில் நன்கொடை பெற முயற்சிப்பதன் மூலம் ஒரு பெரும் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கின்றோம். இவற்றைத் தவிர்த்து தீவு முழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றோம். சங்கங்களைப் பொறுத்த வரையில் முன்பு நடைமுறையில் இருந்த மாவட்ட சங்கங்களுக்குச் செலுத்தப்படுவதற்கென இருந்த நிதியினை ஒன்றுதிரட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாட்டு கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும் நன்கொடைகளையும், உதவிகளையும் பெற்றுக்கொள்ள அபிப்பிராயப்பட்டுள்ளோம்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் புதுக் கட்டடம் சகல வசதிகளுடனும் நிறுவப்படுவது, இலங்கைக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் இயக்கத்தின் கௌரவத்திற்கு இது ஒருபெரும் சின்னமாகுமென்பதில் எதுவித சந்தேகமுமில்லை. இக்கட்டடம் சம்பந்தப்பட்ட விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) தேசிய, சர்வதேசிய கருத்தரங்குகளை நடத்துவதற்கான சகல வசதிகளுடனுமமைந்த கருத்தரங்கு மண்டபம்.

(ஆ) கூட்டுறவு உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான விற்பனை நிலையம்.

(இ) மக்கள் வங்கிக் கிளை

(ஈ) கூட்டுறவு பரிசோதனைக் கூடமும், திட்ட நிலையமும்,

(உ) கூட்டுறவு நூதனசாலை

(ஊ) தேசிய, சர்வதேசிய (கூட்டுறவு) விருந்தினர்களுக்கு சகல வசதிகளுடன் அமைந்த விடுதி வசதி.

(எ) கூட்டுறவு முகாமைப் பயிற்சி நிலையம்.

கட்டடங்கள் (சொந்த) இல்லாத மாவட்ட நிர்வாக சபைகளுக்கு ஒரு பொது வேலைத்திட்டமொன்றிற்கு அமைய கட்டடங்களை நிறுவிக் கொடுக்க அபிப்பிராயப்பட்டுள்ளோம். தேவையற்ற கட்டடங்களினால் சபையின் நிதி விரயம் செய்யக் கூடாது என்பதற்காகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நிலைய (மாவட்ட) கட்டடங்கள்**

இக்காலப் பகுதிக்குள் மாவட்ட நிலையங்கள் பலவற்றின் கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. சபையின் நிதி நிலையைக் கவனத்திற் கொண்டு ஏனைய பழுது பார்த்தல் வேலைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ளது. நிலையங்களுக்குத் தேவையான தட்டச்சு இயந்திரங்கள் வழங்கப்பட்டதுடன், தளபாடங்கள் பழுது பார்க்கப்பட்டு, புதுத் தளபாடங்களும் வழங்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாகவும் தற்பொழுது கிடைத்துள்ள விண்ணப்பங்கள் சம்பந்தமாகவும் சகல முயற்சிகளும் எடுக்கப்படும்.

**15. உணவு, கூட்டுறவு, சிறுகைத்தொழில் அமைச்சு**

1975 செப்டம்பர் மாதத்தில் கபினட் சபை மாற்றியமைக்கப்பட்ட போது கூட்டுறவுத் துறை இவ்வமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்நாட்டு கூட்டுறவாளர்களின் நீண்ட கால வேண்டுகோளுக்கு அமையவே கூட்டுறவுத் துறைக்கென விசேட ஒரு அமைச்சு ஏற்படுத்தப்பட்டுள்ளமை. குறித்து கூட்டுறவாளர்களாகிய நாம் எல்லோரும் சந்தோஷப்பட வேண்டும். இவ்வமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சராக திரு. எஸ். கே. கே. சூரியாராச்சி அவர்கள் பதவி ஏற்றதன் பின்னர் 24-11-1975 திகதி அவருடன் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. அப்போது உத்தேசிக்கப்பட்ட கூட்டுறவு புனரமைப்பு சம்பந்தமாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதோடு, இத்துறையை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும் அமைச்சர் அவர்களது கவனம் ஈர்க்கப்பட்டு அவற்றிற்கான நிவாரண வழிகளும் பிரேரிக்கப்பட்டன.

விசேடமாக சபையின் பிரதான கராரியாலய கட்டடத்தனை நிறுவுவதற்கு அமைச்சர் அவர்களின் அனுமதி பெறப்பட்டதுடன், கூட்டுறவு மொத்த நிறுவனத்தை தலைமைக் கூட்டுறவு சங்கமொன்றாக மாற்றுதல், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்காக தலைமைச்சங்கமொன்றினை நிறுவுதல், மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திகளை கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்பனை செய்தல், மக்கள் வங்கி பணிப்பாளர்களுள் கூட்டுறவுத் துறைக்கான பணிப்பாளர் எண்ணிக்கையினை 5 ஆக அதிகரித்தல்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# தேசீய அடிப்படையில் கூட்டுறவு மகளிர் குழு

தேசீய அடிப்படையில் கூட்டுறவு மகளிர் குழுவொன்று நியமிக்கப்படவிருக்கிறது என ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் பொதுச் செயலாளர் சகல மாவட்ட செயலாளர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு இயக்கத்தில் மகளிர் பங்கினை அதிகரிப்பதற்காக இக்குழுவினை நியமிக்க வேண்டும் என்று 1975ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்நிருபத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதன் சாரம் வருமாறு;

மேற்படி குழுவிற்காக ஒன்பது மாகாணங்களிலிருந்தும் ஒன்பது மகளிர் தெரிவு செய்யப்படுவர். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஐந்து ஐந்து மகளிர் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆதலால் செயலாளர்கள் தங்கள் பிரிவிலுள்ள ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கங்களும் தமது உறுப்பினர்களிலிருந்தும் ஐந்து ஐந்து பேர்களை நியமித்து தமக்கு அனுப்புமாறு மேற்படி சங்கங்களுக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு சங்கங்களிலிருந்து நியமனம் செய்யப்பட்டவர்களிலிருந்து ஐந்து மாவட்ட பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான மாவட்டக் கூட்டத்தினை செயலாளர்கள் நவம்பர் 5–ந் திகதிக்கு முன்பு ஒரு சனிக்கிழமை கூட்ட வேண்டும்.

அக்கூட்டத்தில் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்களையும், விலாசங்களையும் பொதுச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட இம்மாவட்ட பிரதிநிதிகளிலிருந்து தேசீய அடிப்படையில் மகளிர் குழுவிற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்தலை நவம்பர் மாதம் 27ம் திகதி நடாத்த கூட்டுறவுச் சபை எதிர்பார்க்கின்றது.

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

## பல்வகைக் கூட்டுறவு...

வேண்டியுள்ள இடங்களில் பெருமளவிலான பண்ணைகளை ஏற்படுத்துவதன் மூலம் செலவினைக் குறைக்க முடியாதெனத் தர்க்கிக்கின்றனர். மேலும் உற்பத்தியின் விளைவு தங்கியிருப்பது, விவசாயிகள் உற்பத்தியின்பால் காட்டுகின்ற உற்சாகத்தில் அன்றி உற்பத்தி நிலம் தமக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென்ற தனிப்பட்ட காரணத்தில் அல்ல எனவும் குறிப்பிடுகின்றனர்.

இவ்விருபாலாரும் தாம் ஏற்றுக் கொள்கின்ற விடயம் (முறைகள்) சார்பாக தர்க்கிப்பதனுல் சில சந்தர்ப்பங்களில் சிறந்த முறை எது என்பதைக் கூடத் தீர்மானிக்க முடியாமல் போகின்றது.

**5. கூட்டு விவசாய சங்கங்கள் சிறந்த முறையில் இயங்கத் தேவையான சூழ்நிலைகள்**

**5. 1.** தனியாண்மை பெருமளவில் நீக்கப்படுவதனுல் கூட்டு விவசாய சங்கங்களை சிறந்த கூட்டுறவச் சங்கங்களாகக் கணிக்கலாம். (தனியாண்மை பூரணமாக நீக்கபபடுகின்றது என்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது, சுவாமிகள், பூசாரிகள் ஏனைய சமய குருக்கள் என்போரைத் தவிர்த்தாகும்) இதன் பிரகாரம் மிகச் சிறந்த சமூக ஒழுக்கத்தினையும், கூட்டு முயற்சியினையும் விளக்கி அவற்றினை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இச் சங்க உறுப்பினர் திகழ வேண்டும்.

**5. 2.** பிரச்சினைக்குரிய விடயங்கள் பெருமளவில் குறைவாக உள்ளமையினுல், உறுப்பினரது ஒருமுகப்பட்டதன்மையினைக் காரணமாகக் கொண்டு கூட்டு முறையில் இயங்க சிறந்த சூழ்நிலை ஏற்படும்.

**5. 3.** நியாயமான முறையிலும் ஒரே சமமாகவும் விடயங்களைப் பகிரக்கூடிய ஒரு வேலைத் திட்டமும் நன்மை, தீமைகளை (பரிசில்கள்—தண்டம்) நீதியான வகையில் பங்கீடு செய்யும் திட்டமொன்று இருக்க வேண்டும்.

**5. 4.** கூட்டுறவு விவசாயப் பண்ணையின் தலைமை மக்களது தேவைகளை உணரக் கூடியதும், அவற்றினைச் செயற்படுத்தும் திறமை படைத்தவருமான ஒருவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு வகையில் அரசாங்கம் பலவித அரசாங்க திணைக்களங்களுடன் சேர்ந்தும் இன்னெரு வகையில் அரசாங்கம், கூட்டுறவுப் பண்ணைகளுடமும் சிறந்த தொடர்புகளை உருவாக்கவேண்டியுள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்ட சகல விடயங்களையும் அதே வகையில் உருவாக்குவது மிகக் கஷ்டமானது. கூட்டுறவு விவசாயச் சங்கமொன்றின் வெற்றி, அரசாங்கத்துடன் ஜனநாயக அடிப்படையில் ஒத்துழைப்பதில் தங்கியிருக்கின்றதா? அவ்வாறன்றி அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்டு இயங்குவதில் தங்கியிருக்கின்றதா? என்பது வாதத்திற்குரிய ஒருபிரச்சினையாக உள்ளது.

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டுறவுச் சபை...

என்பன சம்பந்தமாகவும், உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டுறவு காப்புறுதிச் சங்கத்தினை விரைவில் நிறுவுதல் சம்பந்தமாகவும் விடயங்கள் எடுத்து விளக்கப்பட்டன. (வளரும்)

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

## கூட்டுறவு முகாமைச்...

கியமை, ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையுடன் இணைந்து கலகெதர என்ற இடத்தில் உறுப்பினர் கல்வித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியமை என்பன இவ்வாறு நிறைவேற்றப்பட்ட விடயங்களுள் சிலவாகும். இத்தகைய திட்டங்களினுல் விசேடமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மகாபோக உரவிற்பனை முந்திய வருடத்தினைவிட 300வீதம் (அதாவது 3000 அந்தர்) அதிகரித்தது. ஆரம்ப சிறு ஏற்றுமதிப் பொருட்கள் சம்பந்தப்பட்ட திட்டத்தின் மூலம், இப் பொருட்கள் ஒழுங்கு முறையாகவும், பெருந் தொகையாகவும் சேகரிக்க முடிந்ததோடு, ஒப்பந்த விவசாய திட்டத்தின் மூலம், ஒப்பந்தத்திற்கு உட்பட்ட விவசாயிகளுக்கு அப்போதைய சந்தை விலையைவிட நூற்றுக்கு 40% அதிக விலையைப் பெற்றுக் கொள்ள முடிந்ததோடு, இதுவிடயத்தில் பெரும் ஊக்கமெடுத்து உழைத்த பிராந்திய முகாமையாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்றினைச் செலுத்தவும் முடிந்தது.

வேண்டுகோள்களின் பேரில் சங்கங்களுக்கும், கிளைச் சங்கங்களுக்கும் இந்நிலையம் ஆலோசனைச் சேவையை பெற்றுக் கொடுத்துள்ளது. மேலும் தொழிற்சாலை ஒன்றினை ஆரம்பித்தல் சம்பந்தப்பட்ட சாத்தியக் கூறுகள் பற்றிய ஆய்வு வேலை, வேறு ஒரு தொழிற் சாலைக்கென கணக்கு வைத்தல் முறையொன்றினைச் தயாரித்தல், பெருமளவிலான கூட்டுறவு நிறுவனங்கள் பலவற்றிற்கு நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக ஆலோசனைகள் வழங்குதல், சங்கங்களுக்கென திடீர் விபத்து நஷ்ட ஈட்டு திட்டமொன்றினை அறிமுகம் செய்தல் சம்பந்தப்பட்ட ஆலோசனை வழங்குதல் என்பனவும் இந் நிறுவனத்தினுல் மேற்கொள்ளப்பட்ட விடயங்களுள் சிலவாகும்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜேர்மன் ஜனநாயக...

பயன்படுத்தியது. யுத்தத்திற்குப் பின் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசுப்பகுதியில் பஞ்சநிலைமை இருந்ததினுல் உணவுப்பொருள் தட்டுப்பாடு இருந்தது. ஆகவே இத்தட்டுப்பாடான பொருட்களை வினியோகிக்க எமது நாட்டைப் போல் அரசாங்கம் பங்கீட்டு முறையை அமுலுக்குக் கொண்டுவந்து வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை வருவிக்கக் கூடிய நிதி நிலை நாட்டில் இருக்கவில்லை.

ஆகவே பங்கீட்டிற்கான உணவுப்பொருட்களை உள்நாட்டு உற்பத்தியிலேயே பெறவேண்டியிருந்தது. உணவுத்தட்டுப்பாடு இருந்ததால், விவசாயிகள் தமது உற்பத்தியைக் கறுப்புச் சந்தைமூலம் விற்று கூடிய வருமானத்தைப் பெறும் மனப்பான்மை கொண்டிருந்தனர். ஆகவே நாட்டில் உற்பத்தியாகும் உணவுப்பொருளை நாட்டு மக்கள் எல்லோருக்கும் பங்கீட்டு முறையில் ஓரளவுக்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்வதற்கும் அப்பொருளைக் கறுப்புச் சந்தைக்குப் போகாது கொள்வனவு செய்வதற்கும் உற்பத்திப் பொருள் கட்டாயக் கையளிப்பு முறை, இரட்டை விலை முறை என்பவற்றைக் கையாண்டது. இதன்படி விவசாயிகள் தமது உற்பத்தி அளவிற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட அளவு உற்பத்தியை அரசாங்கத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு விலைக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு மேற்பட்ட உற்பத்தியை விவசாயி தான் விரும்பியபடி விற்கலாம். ஆயினும் இதிலும் கறுப்புச்சந்தைமுறையைக் கட்டுப்படுத்த ஆகக்கூடிய விற்பனை விலை விதிக்கப்பட்டது. (வளரும்)

# ஆறு மாதத்தில் 20 இலட்சம் ரூபா

கூட்டுறவுக் கிளைகளும், விற்பனை நிலையங்களும் நவீனமாக்கப்பட்டதன் விளைவாக கொழும்பு வடக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த ஆறு மாத காலத்தில் வருமானம் 22 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது. சுத்த இலாபத்தில் ஒரு பங்கு பணியாளர்களுக்கு ஊக்குவித்தல் ஊதியமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் 46 கிளைகளில் இப்போது 34 கிளைகள் நவீனமாக்கப்பட்டுள்ளதுடன் பாவனையாளருக்குத் தேவையான சகல பொருட்களையும் நேர காலத்திற்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்தில் 66 இலட்சம் ரூபாவாக இருந்த விற்பனைத் திரட்சி ஆகஸ்ட் மாதத்தில் 88 இலட்சமாக உயர்ந்துள்ளது.

சோண்டர்ஸ் பிளேசில் உள்ள இச்சங்கத்தின் மத்திய விற்பனை நிலையத்தில் பாவனையாளர் தமக்குத் தேவையான சகல பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

சங்கத்தின் பணியாளருக்கு ஊக்குவித்தல் ஊதியம் கொடுக்கும் வைபவம் சகிராக் கல்லூரியில் ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு எம். ஆ. பி. தாஸ்வத்தயின் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தலைவர் திரு. ஏ. பி. டயினிஸ் மேற்படி வைபவத்தில் பேசுகையில் பணியாளரின் அளப்பரிய சேவையினுலேயே ஊக்குவித்தல் ஊதியம் கொடுக்க முடிந்தது என்றும், அந்த ஊதியம் எத்தொகையானது என்ருலும் அது உயர்ந்த சேவையின் பிரதிபலிப்பே என்றும் கூறினுர்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் செல்வி அசோகா முனசிங்க பணியாளருக்கு ஊக்குவித்தல் ஊதியத்தை வழங்கினுர்.

யாழ். மாநகர ப. நோ. கூ. ச. கிளையாகிய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடப்பட்டு, ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்டக் குழுவினரால் வெளியிடப்பட்டது. 12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 540–76.